தருமபுரம் ஆதீனம் இலவசவெளியீடு 64

உ

சிவமயம்.

# பதி பசு பாசத் தொகையும் திருவருட்பயன் உதாரணக் கலித்துறையும்

திருக்கைலாய பரம்பரை தருமபுரம் ஆதீனம்
24-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிகஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள் ஆக்ஞைப்படி

ஷை ஆதீன வித்வத்சிகாமணி திருவாளர்
ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை
அவர்களால் பார்வையிடப்பட்டு

ஷை ஆதீனத்திற்குச் சொந்தமான
திருக்கடவூர் தேவஸ்தானம் கட்டளைவிசாரணை
ஸ்ரீமத் இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகளால்

சீர்காழி ஸ்ரீ அம்பாள் பிரசில்
பதிப்பிக்கப்பட்டது.

பிரதி 1940 [ 1000.

565

உ

சிவமயம்.

ஸ்ரீ மறைஞானதேசிகர் 565

இயற்றியருளிய

# பதி பசு பாசத் தொகை.

காழி ஸ்ரீ மறைஞானதேசிகரியற்றியருளிய
உரையுடன்


திருக்கைலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீனம்
உசு-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ
சண்முகதேசிகஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் கட்டளையிட்டருளியபடி

ஷை ஆதீன வித்வத்சிகாமணி பரங்கிப்பேட்டை
ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை
அவர்களால் பரிசோதிக்கப்பட்டு

ஷை ஆதீனத்திற்குச்சேர்ந்தமான திருக்கடவூர்
தேவஸ்தானம் கட்டளைவிசாரணை
ஸ்ரீமத் இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகளால்

சீர்காழி ஸ்ரீ அம்பாள் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.

பிரதி ] 1940. [ 1000.



திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமபுர ஆதீனம்

23-வது மகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்ரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பதி பசு பாசத்தொகை முகவுரை.

பூமன்னு சீரறஞ் செய்துமெய்ப் பேறும் புனைபுகழும்
நாமன்னு கல்வியும் நாடும் நயமிலேன் நற்றருமைப்
பாமன்னு ஞானசம் பந்தப் பெருமான் பதாம்புயத்துத்
தேமன்னு வண்மை யிவைநல்கு மாவென் சிறுமைகண்டே.

சித்தாந்தமாவது சிவாகமம், வேதாகமங்களின் முடிந்தமுடிபு. இம்முடிபை நிகமாந்த சம்மதமாக விளங்கும் சுத்தாத்துவித சித்தாந்த வைதிக முத்திப்பேறு என்ப. சிவாகமம் சித்தாந்த மெனப்படும். எங்ஙன மெனின் வேதத்துட் கூறிய கருமகாண்டப் பொருட்கின்றியமையாத பொருள்களையும், வேதமுடிபாகிய உபநிடதத்தின் சாரமாயுள்ள பொருள்களையும் வேறெடுத்துக்கொண்டு, சாருவாக முதற் சைவவாத மீறாகிய கொள்கைகளைப் பூர்வபக்கஞ்செய்து, சிவஞானத்தைத் தெரித்தலினென்க. உத்தமமாணாக்கர் சற்குரவர் பக்கற்சார்ந்து, சைவசித்தாந்த வுண்மைப்பொருளை நான்கு வேதம் உபநிடதம் சைவாகமம் திராவிடவேதம் மெய்கண்டசாத்திரம் புராணேதிகாசம் பிரமசூத்திரம் சாம்பிரதாயநூல் இவற்றின் வாயிலாக அளவைகளை யாராய்ந்து, திரிபதார்த்தங்களின் பொதுச் சிறப்பதிகாரங்களைப் பிரமாணம் இலக்கணம் சாதனம் பயன் என்னும் நான்கியலின் வைத்துக் கற்றுக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து கூடிப் பேறு பெற்றுய்வர்.

சற்குரவராவார் சைவாதீனத்து ஞானமூர்த்திகளாக அவ்வக்காலத்து எழுந்தருளியிருக்கும் பரமாசாரியர்களே. இவ்வாசாரியர்பால் ஞானோபதேசம் பெற்

றப் பரமசாம்பிராச்சியத்தை யடைந்த சிவஞானிகள் அவ்வக்காலத்துச் சைவார்த்தத்தைத் தங்கள் அநுபவத்தின்படி திருவருள் உணர்த்த எம்மனோர் உஜ்ஜீவிப்பிற் கிரங்கிச் செந்தமிழ் நடையில் அரிய பிரபந்தங்களை இயற்றியுள்ளார்கள். இந்நூல்களுள் ஒன்று பதி பசு பாசத்தொகை. இது குறள் வெண்பாவா லாக்கப்பட்டுத் தத்துவத்திரயத்தை இரத்தினத்திரயம்போற் காட்டுவது. இந்நூற்பிரதியொன்றை 1903ஸு மேமீ 20உ திருநெல்வேலி ம-ா-ா-ஸ்ரீ எஸ். பால்வண்ண முதலியாரவர்கள் மதுரையிற் பரிசோதித்துவருகையில் யான் பார்க்கும் பாக்கியம் பெற்றேன். இந்நூலை அவர்கள் செந்தமிழிலும் விவேகபாநுவிலும் பிரசுரித்தார்கள். அப்பிரசுரம் இப்போது கிடைப்பது அரிது. இந்நிலைமையில், இந்நூற் சொற்செறிவையும் பொருள் விரிவையும் ஆய்ந்தருளிய தருமபுரவாதீனம் 23-வது பரமாச்சாரியாரவர்களாகிய ஸ்ரீ ல ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள், திருமடத்துச் சுவடியிலிருந்து ஒரு பிரதி யெழுதுவித்துத் திருநெல்வேலி மகா-ா-ா-ஸ்ரீ எஸ். அநவரதவிநாயகம்பிள்ளையவர்கள் எம். ஏ., எல். டி. எனக்கு அனுப்புவித்த பிரதியோடு ஒப்புநோக்கி, எனக்குப் பிரசுரஞ் செய்யுமாறு அநுமதிதந்தருளினார்கள்.

இந்நூலை இயற்றியருளிய ஸ்ரீ மறைஞான தேசிகரையும், அப்பெயர்பூண்ட பிறபெரியாரையும் பற்றிய ஆராய்ச்சிகள் சித்தாந்ததீபிகை (1902ஸு ஆகஸ்டுமீ), விவேகபாநு (1903ஸு ஜனவரிமீ), செந்தமிழ் (1923) செந்தமிழ்ச்செல்வி (5-12;6-1), சித்தியாரறுவருரைப் பாயிரக்குறிப்பு, மகாசிவராத்திரிகற்ப முகவுரையிவற்றுட் கண்டுகொள்க. இப் பதி பசு பாசத்தொகைக்கு உரைவரைந்தார் மறைஞானதேசிகர். இத்தேசிகர் சீகாழிப்பதியில் பிராமணகுலத்திற் றோன்றிக் கண்ணுடைய வள்ளல்கள் அறுபத்துநால்வருள்

ஆளவந்தவள்ளலார் சந்தானத்தைச் சேர்ந்தவர். சிவ ஞானசித்தியாருக்குக் காண்டிகையுரையும் இயற்றியவர் என்றுதெரியவருகிறது. இந்நூல் யாவர்க்கும் இன்பம் பயப்பதாக.

## திருவருட்பயன் உதாரணக்கலித்துறை.

வேதசிவாகமங்களின் உண்மைப்பொருளைத் தமிழுலகத்திற்கு பேருபகாரமாக திருவெண்ணை நல்லூர் மெய்கண்டதேவநாயனர் சிவஞானபோதகம் என்னுஞ் சிறந்தநூலை அருளிச் செய்திருக்கின்றனர். அந்நூலின் சிறந்தகருத்துக்கள் எல்லாவற்றையும் விரித்து திருத்துறையூர் அருணந்தி சிவாசாரியசுவாமிகள் சிவஞானசித்தியார் என்னும் அரியபெரிய நூலை அநுக்கிரகித்துள்ளார்கள். இவர்களுடைய சீடராகிய மறைஞானசம்பந்தர்பால் சைவார்த்தங்களைக் கேட்டுணர்ந்த கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியசுவாமிகள் சிவப்பிரகாசம் முதலிய நூல்களையியற்றி யருளியிருக்கின்றார்கள்.

இவற்றிற் சிவப்பிரகாசம் சிறிது விரிந்திருப்பதைப் பற்றிப் பக்குவமுடையார்க்கு எளிதின் மனனமாகும் பொருட்டுத் திருவருட்செயலால் திருவருளடையும் திருவருட்பயன் என்னும் இந்நூலை அருளிச் செய்திருக்கின்றார்கள். இத் திருவருட்பயனுக்குச் சேதுபுராணஞ் செய்தவரும் சேதுமடாலயத் தலைவருமாகிய நிரம்பவழகியதேசிகர் ஒரு பொழிப்புரை யியற்றியிருக்கிறார்கள். இந்நூற்கு ஓர் பதவுரையுளது. இவ்வுரையை சித்தாந்த சாத்திரங்கள் பலவற்றிற்கு பதவுரைஎழுதிய வேலப்பபண்டாரம் எழுதியதாக கூறுவாருமுளர்.

இந்தத் திருவருட்பயன் என்னும் உண்மை நூலை ஏனைய சித்தாந்த நூல்களோடு திருத்தருமபுரம் ஆதீனம் முனிபுங்கவர்களில் ஒருவராகிய வெள்ளியம்பலவாணமுனிவரிடம் கேட்டுணர்ந்த காவை அம்பல

வாணமுனிவர் திருவருட்பயனில் அடங்கியிருக்கும் ரகசியார்த்தங்களை கலித்துறையென்னும் பாவினத்தில் பாடி அருளிச் செய்திருக்கின்றார்கள். இந்நூல் திருவருட்பயனையே மேற்கோள் உதாரணமாகக் கொண்டிருத்தலின் இதனைப் பெரியோர்கள் திருவருட்பயன் உதாரணக்கலித்துறை எனப் போற்றி வருகின்றார்கள்.

உரைநடையில் அமைந்துள்ள நூல்களைப் பார்க்கினும் செய்யுள் நடையில் அமைந்துள்ள நூல்மனனம் செய்வதற்குச் சுலபமாயிருத்தலின் இதனைத் தருமபுரம் ஆதீனத்து 24-வது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள் மேற்கண்ட பதி பசு பாசத்தொகையோடு சேர்த்து அச்சிட்டு வெளியிட்டருளும் வண்ணம் ஆக்ஞாபித்தபடி இவ்விரு நூல்களையும் பரிசோதித்து வெளியிடத்துணிந்தேன். மற்ற நூல்களைப்போல இந்நூலையும் இலவச வெளியீடாக வெளியிட்டருளிய ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருவடிக்கு யான் பன்முறை நமஸ்கரிக்கின்றேன்.

இந்நூல்கள் வெளிவருமாறு எனக்குப் பல வகையினும் பேருதவிபுரிந்த ஷை ஆதீனம் புத்தக நிலையப் பார்வையாளர் திரு. அ. பொ. சிதம்பரதேசிகர் அவர்கட்கும், பரங்கிப்பேட்டை போர்டு ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் வித்வான் திரு S. பெரியசாமிப்பிள்ளை அவர்கட்கும், சீர்காழி லூத்ரன் மிஷின் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் திரு. D. சுந்தரேசஆசாரி அவர்கட்கும் எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன்.

குருபாதம்.

பரங்கிப்பேட்டை,
25—5—40.

ப. அ. முத்துத்தாண்டவராய
பிள்ளை.



திருக்கயிலாய பரம்பரைத் திருத் தருமபுர ஆதீனம்

உச-வது மகா சந்நிதானம்

ஸ்ரீ சண்முக தேசிக பரமாசார்ய சுவாமிகள்

சிவமயம்.

# பதி பசு பாசத் தொகை.

## குறள் வெண்பா.

### விநாயகர் வணக்கம்.

*பவளநிறத் தானைமுகன் பாத நினைப்பா*
*மவளமறுப் பானெம் மகம்.*

இது ஆகமங்களில் ஞானபாதத்தின்கண் கூறப்பெற்ற பொருள்களின் உண்மையை முத்தி அவாவினார்க்கு எளிதிலறிவுறுத்தற் பொருட்டுக் கருணை மேலீட்டினாற் கூறப்புகுந்த இந்நூலாசிரியர் எடுத்துக்கொண்ட விஷயம் இனிது முடிதற்பொருட்டு விக்கினங்களை நீக்க வல்ல விநாயகக்கடவுளை வணங்கும் வணக்கம் உணர்த்துகின்றது.

(பதவுரை) பவளநிறத்தானைமுகன் = செம்பவள நிறமென்ன ஒளிர்கின்ற திருமேனியையுடைய ஆனைமுகப் பிள்ளையாரது, பாதம் = சீபாதங்களை, எம்அகம் = அநாதியே எம்மைப் பந்தித்த ஆணவமலத்தினாலுண்டாம், அவளமறுப்பான் = துன்பமாகிய பிறவியினின்று நீங்குதற்பொருட்டு, நினைப்பாம் = சிந்தித்து வணங்குவாம்.

பிறவித்துன்பத்தை நீக்கவல்ல தாளுக்கு இந்நூல் இடையூறின்றி இனிது முடிவுபெறச் செய்தல் ஓர் அருமையன்று என்பது கருத்து.

"எம்மகம் அவளமறுப்பான்" என்பதற்கு எம் மனத்தின் கண்ணுள்ள மலக்கோணையறுத்தற்பொருட்டு என்று பொருள் கூறினும் பொருந்தும்.

ஈண்டு விநாயகனை ஆனைமுகனென்றெடுத்தோதியது அவன் அத்திருவதனத்தால் தேவர்களது இடுக்கண் தீர்த்த பெற்றி நோக்கியென்க.

கிரியாசக்தி, ஞானசக்தி ஆகிய இவ்விரண்டும் மூத்தபிள்ளையாரது இரண்டு திருவடிகளென்று மேலோர் கூறுவர்.

அகம்—ஆணவம், நெஞ்சம். அவலம்—அவள மென எதுகை நோக்கி நின்றது. அவலம்—துன்பம்.

## பாயிரம்.

### சிவவணக்கம்.

சிவனை நிரஞ்சனனை சின்மயனைச் சீவ
பவமுமறுப் பானைநினைப் பாம்.

இது மங்கல வாழ்த்துரைத்தலை உணர்த்துகின்றது.

(பதவுரை) சிவனை = நித்தியமங்கள சொரூபனுகி யும், நிரஞ்சனனை = நின்மலனுகியும், சின்மயனை = ஞான மூர்த்தியாகியும், சீவன் = ஆன்மாக்களுடைய,பவமுமறு ப்பானை = பிறவித்துடர்ச்சிக் கேதுவாகிய கன்மங்களையு நீக்க வல்லானுகியுமுள்ள சிவபெருமானை, நினைப்பாம் = சிந்தித்துப்போற்றுவாம்.

இது மூவகை வாழ்த்துள், பொருளியல்பு உரைத் ததெனக் கொள்க. என்னை ? இந்நூலுள் முதற்கண் பதியியல் கூறியிருத்தலால் சிவனை நிரஞ்சனனைச் சின்மயனை என்றும், பின்னர் பசுவியல் கூறியிருத்த

லால் "சீவன்" என்றும், அதன் பின் பாசவியல் கூறி யிருத்தலால் "பவம்" என்றும், இறுதியில் அநுக்கிரக வியல் கூறியிருத்தலால் "அறப்பாளை" என்றும், முறையே இம்மங்கல வாழ்த்துள் உய்த்துணர வைத்தமை கண்டு தெளிக.

நிட்களமுஞ் சகளமுமல்லாததாய் தத்துவாதீத மாய் மலரகிதமாய் அநாதிநித்தியமாய் அகண்டிதமாய் அணுவுக்கணுவாய் மகத்துக்கு மகத்தாய் ஆனந்தவுருவாய் ஆன்மாக்களெல்லாஞ் சென்றடையப்படும் பேருய் விளங்கி நிற்பதெதுவோ அது சிவமென்றறிக. பவமும் என்ற உம்மை எஞ்சி நின்ற ஆணவத்தையும் மாயையுஞ் சுட்டி நின்றது.

## சத்தி வணக்கம்.

இரவிக் கொளிபோ லிறையொடுறை வாளைப்
பரவிப் பணிவாம் பதம்.

இது அச்சிவனோடு தாதான்மியப்பட்ட சத்தி வணக்க முணர்த்துகின்றது.

(பதவுரை) இரவிக்கொளிபோல் = சூரியனினின் றும் அவனது கிரணம் எப்படி வேருகாதோ அப்படிப் போல இறையொடுறைவாளை = சிவபிரானோடு அபின்னையாய்ப் பிரகாசிக்கும் பேரொளியாகிய பராசத்தியை பரவி = துதித்து, பதம் பணிவாம் = அவளது திருவடிகளை வணங்குவாம்.

இப்பராசத்தியின் சொரூபம் ஞானமாய் நிஷ்களமாயிருக்கும். அவள் தொழில் வேறுபாட்டால் திரோதானசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி எனப் பல பெயர் பெற்று நிற்பள்.

கிருத்தியத்தைத் திருவுள்ளத் தடைப்பது பராசத்தி. ஆன்மாக்களுக்குப் பெத்தத்திற்பாகம் வருவித்து முத்திவரையினும் வியாபிப்பது திரோதானசத்தி. மலத்தை நீக்கிச் சிவத்துவத்தை அளிக்க வேண்டு மென்ற கருணையே இச்சாசத்தி. சிவத்துவத்தை யளித்தற்கு வேண்டிய உபாயமெல்லாம் உணர்த்துவது ஞானசத்தி. அவ்வுபாயத்தின் வழி நடத்துவது கிரியாசத்தி.

இச்சத்திகள் இறைவனது ஆணைவழியினின்று பஞ்சகிருத்தியங்களைச் செய்வனவாம். அதனால் இறைவன் விகாரியலன். அது சூரியனது கிரணங்கள் தாமரை அலரவும் சலம் வற்றவும் காந்தக்கல் கனல் கக்கவுஞ் செய்தபோதினும், சூரியன் தாக்கற்று நிர்விகாரியாய் இருத்தல் போல் என்க.

## நந்தி முதலியோர் வணக்கம்.

நந்திபத நந்திமா காளரெழு வர்யாவர்
தந்திருத்தா ளும்பணிவாஞ் சார்ந்து.

இது குருவணக்க முணர்த்துகின்றது.

(பதவுரை) நந்திபதம் = சிவகணங்களுக்குத் தலைவராகிய திருநந்திதேவரது திருவடிகளையும், நந்திமா காளர் எழுவர் யாவர் தந்திருத்தாளும் = நந்திமாகாளர் முதலாகவுள்ள எழுவர் யாவரோ அவர்கள் திருவடிகளையும், சார்ந்து பணிவாம் = மனத்தின்கண் தியானித்து வணங்குவாம்.

சிலாதரர் புத்திரராகிய திருநந்திதேவர் உருத்திர சமக தியானத்தினாலே அருள்பெற்று யாவருக்கும் ஞானகுருவாய் எம்பிரான் திருமுன் நிற்கும் பெரும்

பேறெய்தினர். இவரினின்றும் மற்றைய குருசந்தானம் வந்தமையை உண்மை நூல்களாலுணர்க.

நந்திமாகாளர் முதலியோரும் சிவகணத் தலைவராவார்கள். அவர்கள் நந்திமாகாளர், பிருங்கி, இடபம், கந்தர், சண்டன், விநாயகர், பார்வதி என்னும் எழுவர்களாம்.

உம்மை எச்சத்தின்கண் வந்த எண்ணும்மை.

பதிபசு பாசந் தொகுத்துப் பகர்வா
மெதுகதியென் பார்க்கெளிதி லே.

இது பாயிரத்தின் பொதுவிலக்கண முணர்த்துகின்றது.

(பதவுரை) எது கதியென்பார்க்கு = பரமுத்தி எய்துதற்கு (எது உண்மை மார்க்கமென்று அறிய) அவாவுறும் உத்தமர்க்கு, பதி பசு பாசம் = சிவாகமத்தில் விரித்தெடுத்தோதிய ஞானபாதத்திற் கூறப்பெற்ற திரிபதார்த்த இயல்பை, தொகுத்து எளிதில் பகர்வாம் = தொகுத்துச் சுட்டலென்னும் உத்திகொண்டு (தமிழில்) இலேசான முறையிலமைத்துக் கூறுவாம்.

"பதி பசு பாசந் தொகுத்து" எனவே, நூலினது பெயரும், நூல்யாப்பும், நுதலிய பொருளும், நூல் வந்தவழியும், "எது கதியென்பார்க்கு" எனவே காரணமும், கேட்டற்குரிய அதிகாரியும் பயனும் விளங்க உணர்த்துதலை யறிக. தமிழ் வழங்கு மெல்லையே எல்லையாம். "எளிதிற் பகர்வாம்" என்றமையால் வகைவிரியாயெடுத்தோதிய வல்லார் போற் கூறுதற்கு வலியிலேனாயினும், அவரது கருத்தைப்பற்றியே சுருங்கிய இக்குறளடியாற் றொகுத்துக் கூறுகின்றேன் என்னுங்கருத்தால் அவையடக்கமும் உய்த்துணரவைத்ததறிக.

பதி = தலைவன், நாயகன். பசு = பாசத்தளையிற் கட்டுண்ட ஆன்மா. பாசம் = ஆன்மாவைப் பந்தித்த பிணிப்பு. கதி = மோக்ஷம், புகலிடம்.

பாயிரம் முற்றிற்று. ஆகச் செய்யுள்-5.

## நூல்.

### முதலாவது பதியியல்.

பல்லுயிர்க்கு மேக னமலன் சிவன்பதியப்
பல்லுயிரு மீசன் பதி.

இது பரமனது குணங்களுள், அவன் தன் வயத்தனாயிருத்தலை யுணர்த்துகின்றது.

(பதவுரை) ஏகன் = முழுமுதலாயும், அமலன் = அநாதியே மலமுத்தனாயுமுள்ள, சிவன் = சிவபெருமான், பல்லுயிர்க்கும் = எண்ணிறந்த ஆன்மாக்களுக்கும், பதி = நாயகனும், அப்பல்லுயிரும் = அவ்வெண்ணிறந்த ஆன்மாக்களும், ஈசன் = இறைவனுக்கு, பதி = தங்குமிடமாம்.

சிவபெருமான் ஒப்பாரு மிக்காருமின்றித் தன்னந் தனியனாய் இருத்தல் பற்றி "ஏகன்" என்றும், ஆன்மாக்களைப்போல மலபெத்தனின்றி மலமுத்தனாயிருத்தலால் "அமலன்" என்றும், ஈண்டுக் கூறப்பட்டது.

ஈண்டு, பல்லுயிரென்றது விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் மூன்று வகை உயிர்த்தொகைகளை என்க. அவைகள் ஈசன்வதியும் பதியாவதெங்ஙனம் என்னில் இறைவன் சர்வவியாபியாயிருத்தலால், ஆன்மாக்களின் உள்ளும் புறம்புந் தங்கிநிற்போனாயினும், அவன் இயக்கி அறிவித்தவழி நின்று நடப்

பது ஆன்ம சத்தியாதல்பற்றி உயிர்களின்மேல் மாத்திரம் ஏற்றிக்கூறினர்.

மலமுத்தன் = இயற்கையிலேயே மல சம்பந்த மில்லாதவன். மலபெத்தன் = மலத்தோடு பந்திக்கப்பட்டவன். விஞ்ஞானகலர் = ஆணவமல மாத்திரமுடையார். பிரளயாகலர் = ஆணவம், கன்மம், என்னு மிருமலமுடையார். சகலர் = ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலமுடையார்.

ஈசன் = எப்பொருட்குமிறைவன்.

நிராதார தீக்ஷையால் விசிட்டமான சிவஞானமுதயமாய்ச் சிவாநுபவம் பெற்றுச் சர்வசங்காரகாலத்தில் மந்திரதேகத்தை விட்டுச் சிவத்துடன் இரண்டறக் கூடுதலால் விஞ்ஞானகலரென அழைக்கப்பெறுவர். பிரளயமாகிய சர்வசங்கார காலத்தில் புரியட்டக தேகத்தை விட்டுச் சிவாநுபூதியடைபவர்கள், பிரளயாகலர்.

சகலர்—கலாசகிதர், ஸ்தூலதேகமுடையவர். இவர்கள் இருவினையொப்பு வந்தபின் சத்திநிபாதமுற்று குருவினால் மோக்ஷமுறுவர்.

உடலொலியின் மூல வொலியுறைதல் போலக்
கடவுளுயிர் தோறுமுறுங் காண்.

இது சிவன் எங்கும் வியாபகனாயிருத்தலை உணர்த்துகின்றது.

(பதவுரை) மூலவொலி = அகரவொலி வடிவெழுத்து, உடலொலியில் = மெய்யொலி வடிவெழுத்தில், உறைதல்போல = தங்கிநிற்குந்தன்மைபோல, கடவுள் = இறைவனும், உயிர் தோறும் = ஆன்மாக்கள் தோறும், உறும் = பொருந்தி நிலைபெறுவன்.

எவ்வெழுத்தும் உச்சரிக்கப்படுங்கால், அகரவொலியே முதற்கண்ணின்று அவ்வெழுத்துக்களை இயக்கி ஒலிப்பிக்குந்தன்மை பற்றி "மூலவொலி" என்று கூறினர்.

மெய்யொலிகள் உயிர்த்துணையாய்ப் பிறக்குமேயன்றித் தாமே தனித்துப் பிறக்கும் வன்மையுடையன வல்ல ஆதலால் "உடலொலி" என்றார்.

ஒற்றொலியைக் கண்ணொளிக்கும், உயிரொலியைக் கதிரவன் ஒளிக்கும் சமப்படுத்திக் கூறுவர்.

எழுத்துக்கள் தோறும் அகரஞ் சென்றிருத்தல் போல் ஆன்மாக்கள்தோறுஞ் சிவன் வியாபித்திருப்பன். அகரமின்றி எழுத்துக்கள் இயங்காத் தன்மைபோல், இறைவனையின்றி ஆன்மாக்களும் இயங்கா. அகரம் எழுத்துக்களுக்கெல்லா முதலாயினாற்போல் இறைவனும் ஆன்மாக்களுக்கெல்லா முதல்வனாவன். அகரம் தனித்துப், மெய்யொடு கூடியும் இயங்குதல்போல், இறைவன் ஆன்மாக்களுக்குடனாயும், வேறாயும் நிற்பன். மற்றவை ஈண்டுவிரிப்பிற் பெருகும்.

இஃது ஒருபுடையுவமை. காண்—அசை. உறும்—செய்புமென்னும் வினைமுற்று.

ஆதாரம் வேர்மரத்துக் கீச னனைத்துயிர்க்கு
மாதாரம் வேர்க்குமர மன்று

இது இறைவனது சருவ காரணத்துவம் உணர்த்துகின்றது.

(பதவுரை) மரத்திற்கு ஆதாரம் வேர் = மரத்தை நிலைநிறுத்தி வளர்ப்பதற்குக் காரணமாயிருப்பது வேராம், ஈசன் அனைத்துயிர்க்கும் ஆதாரம் = (அது

போல) சகலபுவனங்களிலும் வினைக்கீடாய்த் தோன்றிச் சஞ்சரிக்கும் ஆன்மாக்களுக்கெல்லாம் பரமசிவமே ஓர் களைகணுவன், வேர்க்கு ஆதாரம் மரமன்று = வேரை நிலைநிறுத்தி அதனைச் சீவிக்கச் செய்தற்குக் காரணம் அவ்வேரையே ஆதாரமாகக் கொண்ட மரமன்று; அது போலப் பஞ்சகிருத்தியங்களையும் சங்கற்ப மாத்திரத் தாற் செய்யும் பரமனுக்குப் பிறந்திறந்து உழன்று திரி யும் ஆன்மாக்கள் ஆதாரமாகாவாம். (இது இசை யெச்சம்)

அநாதி கேவலத்தில் ஆணவமலத்தோடு கூடி அறிவு, இச்சை, செயலற்றுக்கிடந்த ஆன்மாக்களைக் கருணை மேலீட்டினால் எடுத்துக் கன்மத்திற் கேற்பத் தநு, கரண, புவன, போகங்களை அளித்து, பாகம் வருவி த்தற் பொருட்டுச் சகலாவஸ்தையில் பலதரம் விட்டு, இருவினையொப்பு வந்தவாறே ஆசாரியமூர்த்தமாய் எழு ந்தருளி, தீட்சையால் சஞ்சிதத்தையொழித்து, ஆகாமி யம் ஏருதபடியுங்காட்டி, ஆன்மாவினுடன் அபேதமாய் நின்று தேகத்தோடு பிராரத்துவத்தையும் போக்கி, அழியாப்பேருகிய முத்தி வீட்டின்கண் இருத்தி வாழ் விக்கும் முழுமுதல் அவனேயாதலால், அவன் அனைத் துயிர்க்கும் ஆதாரமானுன் என்று கூறப்பட்டது.

பிந்திய ஆதாரத்தை நடுநிலைத்தீபகமாக்கி சரிடத் துங் கூட்டுக.

ஆகஞ் சடங்கா ணணுவறியா திவ்விரண்டின்
யோகஞ் சிவனுலென் ருேர்

இது இறைவன் இயற்கை யுணர்வினனுதலை யுணர் த்துகின்றது.

(பதவுரை) ஆகஞ் சடம் = ஆன்மாக்கள் பொருந்துவதற்கான பல்வகைப்பட்ட உடல்களும் அசித்துப் பொருள்களேயாம், அணு அறியாது = மலத்தால் மறைப்புண்ட அற்ப அறிவினனாகிய அவ்வான்மாவும் தானேயாதாமோர் உடலினுட் பொருந்துதற்கு அறியமாட்டாது, இவ்விரண்டின்யோகம் = மாயா காரியமாகிய உடலையும் சிற்றறிவினனாகிய ஆன்மாவையும் ஒன்றுபடுத்தலாகிய செயல், சிவனாலென்று ஓர் = இயற்கை உணர்வினனாகிய இறைவனால் என்று அறிவாயாக.

மாயை சடமாதலால் அதன் காரியமாகிய உடலும் சடமேயாம். ஆன்மா சித்தாந்தன்மையில் கடவுளோடு ஒத்த ஜாதியாயிருப்பினும் இறைவனது பேரறிவையும் இவனது சிற்றறிவையும் உற்றுநோக்குங்கால் அவனுக்கு இவன் அசித்தாம். கேவலாவஸ்தையிற் கிடக்கும் ஆன்மாக்கள் கருவி கரணாதிகளோடு கூட்டப்பட்டாலன்றி, அவைகள் மலநீங்கித் தம் நிலைமையையும் தலைவனது நிலைமையையும் அறிந்து உய்யமாட்டாவாதலால், கருணைவள்ளலாகிய கடவுளும் ஆன்மாக்களைத் தேகங்களோடு சம்பந்தப்படுத்துவானாயினன். இவ்வாறு சம்பந்தப்படுத்துவது, புடவையின் அழுக்கை உவர், சாணி முதலியன கொண்டு சுத்தப்படுத்துதல் போலெனக.

ஆணவமலத்தால் ஆன்மா தனது வியாபக அறிவிற் சுருங்கி அணுத்தன்மை எய்தியதால் ஆன்மா ஈண்டு அணுவென்று கூறப்பட்டது. ஆகம் = தேகம். யோகம் = சேர்க்கை.

இக்குறள் தேகத்துக்கு அந்நியமான ஆன்மாவினது உண்மையையும், அவ்வான்மாவைப் பிரேரித்தற்குரிய ஓர் கடவுளது உண்மையையும், அறிவுறுத்துகின்றது. காண் = அசை.

கருமஞ் சடம்பலத்தைக் காட்டாது காட்டு
நிருமலனென் றேநீ நினை

இது இறைவன் பாசங்களினின்று நீங்கி யிருத்தலை உணர்த்துகின்றது.

(பதவுரை) கருமம் = கன்ம மலம், சடம் = அசித்தேயாம், பலத்தை = அதனால் ஆன்மாக்கள் அடையவேண்டிய இன்ப துன்பங்களை, காட்டாது = அக்கன்மந் தானே இயைந்து அநுபவிக்குமாறு செய்யாது, நிருமலன் = மலரகிதனாகிய பரமனும், காட்டுமென்றே நீ நினை = ஆன்மாக்களுடன் பொருத்துவிப்பானென்று நீ நினைப்பாயாக.

ஆன்மாக்களாற் செய்யப்படும் நல்வினை தீவினைகளை ஸ்தூல கன்மமென்றும், இவ்விருவினைகளுக்கும் பலனாய் வரும் புண்ணிய பாவங்களை சூக்கும கன்மமென்றும், இப்புண்ணிய பாவங்களுக்குப் பலனாய் வரும் இன்ப துன்பங்களை அதி சூக்கும கன்மமென்றும் உண்மை நூல்கள் கூறுகின்றன.

இவைகள் முறையே ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்துவமென்று அழைக்கப் பெறுவனவாம். இவைகள் நெல்விளைவித்துக் களஞ்சியத்திற் சேர்த்து, பின் கொஞ்சம், கொஞ்சம், எடுத்துப் புசித்தற்கு ஒப்பன. இவைகள் வன்மை, மென்மை என இருதிறப்பட்டு நிற்பனவாம். இவைகள் முன்பு ஆர்ச்சித்த ஒழுங்கிலேயாயினும், முறை மாறியேயாயினும் ஆன்மாக்களை வந்து பொருந்துவனவாம். ஜாதி, ஆயுள், போகம், ஜனன மரண முதலியவைகளுக்குக் காரணமும் இவைகளே. நல்வினை தீவினைகளுள் ஒன்றற்கொன்று ஈடாகமாட்டாது. யாவும் அநுபவித்தே தீரவேண்டும். முன்னர்க் கூறிய பிராரத்துவ கன்மம், தெய்வத்தால் வரும் ஆதி

தெய்வீகம், பஞ்ச பூதங்களினால் வரும் ஆதி பௌதீகம், பிறவுயிர்களால் வரும் ஆதி ஆன்மீகம் என முத்திறப் பட்டு நிற்கும்.

மல பெத்தர்களாகிய ஆன்மாக்களைப் பக்குவ மடைவித்ததற்கு மலமுத்தனாகிய ஒருவனாற் கூடுமாத லால் ஈண்டு இறைவனை நிருமலனென்று கூறினர்.

இச்செய்யுளினால் கன்ம வாதியை மறுத்தவாறு யிற்று.

சடமாயை தானே சமையா தனுவுங்
கடவுடரு வான்வினையைக் கண்டு

இது இறைவனது சருவஞ்ஞத்துவத்தை உணர்த்துகின்றது.

(பதவுரை) மாயை = மாயாமலமானது, சடம் = அசித்துப் பொருள், தனுவும் = அம்மாயையை முதற் காரணமாய்க் கொண்ட உருவமும், தானே = இயல்பாக, சமையா = உண்டாகமாட்டா, வினையைக்கண்டு = ஆன் மாக்களின் கன்மத்திற்கேற்ப அறிந்து, கடவுள் = சருவஞ்ஞனாகிய பரமனும், தருவன் = ஆன்மாக்களுக் குத் தேகங்களைக் கொடுப்பன்.

ஜனன மரண சாகரங்களில் விழுந்து தத்தளித்து வரும் இவ்வான்மாவைப் பக்குவமுறுவித்து முத்தி வீட்டின்கண் இருத்துங் கருணை மேலீட்டினாலே, ஆன் மாவிற்கு இன்ன வினையை முன்னும், இன்ன வினையை அதன் பின்னும் சோபான முறையாய்க் கூட்டிவைத் தால் அவ்வான்மா பக்குவமுறும் என்று அறியுஞ்சக்தி முற்றறிபவன் ஒருவனுக்கே சாலும் என்பதை இது தெரிவிக்கின்றது. வினையை அநுபவிக்கச் செய்தல்

அவ்வான்மாவைத் தேகத்தோடு கூட்டினாலன்றி முடியாதாதலால் முதற்காரணமாகிய மாயையினின்றும் இறைவனும் குலாலனைப்போல் உருவமைப்பானாயினான். மேலும் அம்மாயை நித்தமாய் அருவாய் உள்ளது. சருவசங்கார காலத்தில் இவ்வுலகெல்லாம் அதனிடத்தொடுங்கி, மீண்டும் அதனின்றும் புனருற்பவமுமாம்.

இது ஆன்மாவிற்குச் சிறிது அறிவை விளக்கும். இது சுத்தமாயை, சுத்தாசுத்தமாயை, அசுத்தமாயை என முத்திறப்பட்டு நிற்கும். இவைகளினின்றும் ஆன்ம தத்துவம் 24-ம், வித்தியாதத்துவம் 7-ம் சிவதத்துவம் 5-ம் ஆகிய முப்பத்தாறு தத்துவங்களும் உண்டாம். மீண்டுந் தோற்றியவாறே ஒடுங்கும். இதன் பரப்பையெல்லாம் சித்தியார் முதலிய உண்மை நூல்களுள் உணர்ந்து கொள்க.

வருத்திய னல்லன் மருத்துவனோ யர்க்கு
நிருத்தனையிவ் வாறு நினை.

இது இறைவனது பேரருளை உணர்த்துகின்றது.

(பதவுரை) நோயர்க்கு = பிணியாளருக்கு, மருத்துவன் = சிகிச்சைசெய்யும் வைத்தியன், வருத்திய னல்லன் = துன்பப்படுத்தினவனாக மாட்டான், நிருத்தனை = பஞ்சகிருத்தியங்களைச்செய்யுஞ் சிவபிரானை, இவ்வாறு = மேற்கூறிய வைத்தியனைப்போலவே, நினை = எண்ணுவாயாக.

இவ்வுலகத்தின் கண்ணுள்ள மருத்துவர் சூரியாடுதல் ஔடதப் பிரயோகஞ்செய்தல் முதலியவைகளால்

சிலவியாதிகளையும், மருந்துடன் சருக்கரை சேர்த்துக் கொடுத்துச் சிலவியாதிகளையும் தீர்ப்பர். அதுபோல இறைவனும் ஆணவமலநோயால் வருந்தும் ஆன்மாக்களைத் தமது திரோதானசத்தியால் பக்குவம்வருவித்தற் பொருட்டு, அவைகளுக்கு இன்ப துன்பங்களை நுகர் விப்பன், நிரயத்துமிடுவன். இது வைத்தியநாதனாகிய சிவபெருமான் உயிர்கள் மாட்டுவைத்த கருணையின் நிகழ்ச்சியேயன்றி வேறன்று.

வருத்தியன்—தொழிலால் வருபெயர்.

உதவி யிரவி யுலகுக் கிரவிக்
குதவி செயுமோ வுலகு.

இது இறைவனது முடிவிலாற்றலை உணர்த்துகின் றது.

(பதவுரை) உலகுக்கு = இப்பிரபஞ்சத்திற்கு, இரவி = சூரியன், உதவி = பிரயோஜனகரமாய்ப் பொருந்துவன், இரவிக்கு = அப்படிப் பயனுறுவிக்குஞ் சூரியனுக்கு, உலகு = இவ்வுலகமானது, உதவி செயுமோ = கைம்மாறாகிய பிரயோஜனத்தைச் செய்யத்தக்கதோ? செய்யும் ஆற்றலுடையதன்று.

இவ்வுலகத்தின் கண்ணே துன்னிய புறவிருள் கெடும்படி தோன்றி, ஆன்மாக்களை யெல்லாந் தத்தம் செயல்களில் நிறுத்தி நுகர்வித்தற்கு ஓர் காரணமாயுள்ள சூரியனுக்கு இவ்வுலகம் எவ்வாற்றானுங் கைம்மாறளித்தற் கியலாத்தன்மை போல, அஞ்ஞானத்தை விளைவிக்கும் ஆணவமலசத்தியைத் திருவருளாற் கெடுத்துப் பேரின்பமாகிய சிவானுபவத்தை விளைவிக்கும்

ஞானசூரியனாகிய முதல்வனுக்குத் தோன்றி நின்று அழியுந்தன்மையதான மாயாதேகத்திற் கட்டுண்ட அற்ப அறிவுடைய இவ்வான்மாக்கள் செய்தற்குரிய கைம்மாறெவ்வனே? ஒன்று மின்று.

இறைவனும் வேண்டல் வேண்டாமை என்னும் தன்மைகளை உடையனல்லாத விழுச் செல்வனாதலால் அவன் ஆன்மாக்களின் உதவியை எதிர்பார்த்து நிற்றற்கோர் இயைபின்மையுமறிக.

ஓகாரம் ஈண்டு எதிர்மறைக்கண் வந்தது.

பதியியல் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 13.

---

## இரண்டாவது பசுவியல்.

முறையானே முதற்கண் பதியியல் கூறிப் பின்னர் பசுவியல் கூறுகின்றார்.

ஆகஞ் சடந்தா னியங்கா ததனையா
பாசன் பசுப்பலந்துய்ப் பான்.

இது பசுவினது உண்மை யுணர்த்துகின்றது.

(பதவுரை) ஆகம் = தேகமானது, சடம் = அசித்துப்பொருள், தான் இயங்காது = (ஆதலால் அவ்வுடல்) தானே தொழிற்படாது, அதனை = அவ்வுடலைப் பொருந்திநின்று, ஆபாசன் பசு = திறக்கேடனாகிய ஆன்மா, பலந்துய்ப்பான் = இன்பதுன்பங்களை அநுபவிப்பான்,

பஞ்சபூதங்களுஞ் சடமாகையால் அவைகளின் சேர்க்கையாலாகிய தேகமுஞ் சடமேயாயிற்று. சடப் பொருள்கள் தாமே இயங்கும் வன்மையின்றி இயக்கு வித்தால் இயங்கும் வன்மையுடையன. ஆகவே இவ் வுடல் இயங்குகின்றமையானும், இச்சாஞானக்கிரியை அதன்கண் நிகழ்தலானும், அதனுள் நின்று இயக்கு வான் ஒருவன் உளன்; அவனே ஆன்மா, அவனே இவ் வுடலின்கண் பொருத்தியது, இன்பதுன்பமென்னும் இருவினைகளையும் நுகர்வித்துப் பக்குவம் உறுவித்தற் கேயாம். ஆதலால் அங்ஙனம் நுகர்வானுமவனே.

அதனை யூர்பாகன் என்றும் பாடம்.

ஆபாசன்—போலித்தன்மையுடையோன், திறக்கேடன்.

பொறியுமுயி ரல்ல பொறையுடலு மல்ல
வறிவே யுயிரென் றறி.

இது பசுவின் தன்மையை உணர்த்துகின்றது.

(பதவுரை) பொறியுமுயிரல்ல = ஐம்பொறிகளும் ஆன்மாவாகா, பொறையுடலுமல்ல = உயிர்தாங்கிச் செல் லுதற்குரிய தேகமும் உயிராகாது, (ஆதலால்) அறிவே = தேகத்தின் கண்ணின்று பொறிவழியால் ஐம்புலன் களையும் அறியும் அறிவே, உயிரென்று = ஆன்மா வென்று, அறி = அறிவாயாக.

ஐம்பொறிகளுள் ஒன்றறிந்தபின் ஒன்றறியும். ஒன்றறிந்ததை யொன்றறியாது. ஆகையால் இவ்வைந் தையுங் கருவியாக்கொண்டு, ஞானம் கிரியை இச்சை

இவைகளோடு பொருந்தி அறிவது எதுவோ அதுவே ஆன்மாவன்றி, ஏனைய பொறிகளல்லவென்று உணர்த்தும் பொருட்டு "பொறியு முயிரல்ல" என்றார்.

இவ்வுடல் சவமானபோது அவயவங்களிற் குறைபாடின்றிக் கிடந்தும் அதில் அறிவுநிகழாமையால் அதுவும் உயிரன்று எனக் கூறினார். பொறி ஐந்து :— மெய், வாய், கண், மூக்கு, செவி என்பவைகளே. புலன் ஐந்து :— சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தம் என்பவைகளே. இனம் பற்றி அந்தக்கரணம், பிராணவாயு முதலியவைகளும் உயிரல்லவெனக் கொள்ளப்படும்.

உறக்கத் துணரா வுடலும் பொறியு
முறக்கமு மோரு முயிர்.

இஃது ஆன்மா அவத்தைக்கண்ணும் அறியுமென உணர்த்துகின்றது.

(பதவுரை) உடலும் = தேகமும், பொறியும் = ஐம்பொறிகளும், உறக்கத்து = நித்திரையில், உணரா = அறியும் வலியுடையனவல்ல, (ஆனால்) உயிர் = ஆன்மா, உறக்கமும் = நித்திரையையும், ஓரும் = அறியும்.

"உறக்கமும் ஓருமுயிர்" என்றது விழித்தபின் சுகமாய்த் தூங்கினதான உணர்வு நிகழ்தலைப்பற்றி யென்க. உடலின்கண் யாதொரு குறைபாடுமின்றிக் கிடக்கும் உறக்கத்தின் மூக்கப் பாம்பு அவ்வுடலின் மேலேறியு மதனை யறியாத் தன்மையால் அவ்வுடல், உணருந் தன்மையதன்று. நித்திரையின்கண் உடலி

னிடத்தே ஐம்பொறிகள் பொருந்தி நின்றும் அவைகள் அறியாத்தன்மையால் "உறக்கத் துணரா பொறியும்" என்றார்.

அவத்தை—நிலைமை, அது ஐந்து வகைப்படும் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம், என்பன. இவ்வவத்தையின் விரிவைச் சித்தியாருட், கண்டுணர்க.

> புண்ணியத்தாற் பாவத்தாற் புண்ணியபாவத்தாலு
> நண்ணுமுயிர் மேல்கீழ் நடு.

இஃது ஆன்மா செய்யும் வினைநுகர்தற்கு அடையும் உலகம் உணர்த்துகின்றது.

(பதவுரை) உயிர் = ஆன்மாவானது, புண்ணியத்தால் = சற்கருமப்பயனால், மேல் நண்ணும் = சுவர்க்க போகத்தை யடையும், பாவத்தால் அசற்கருமப்பயனால், கீழ்நண்ணும் = நரகத்திற்சேரும், புண்ணியபாவத்தாலும் = நல்வினை தீவினையின் பயனாகிய புண்ணியபாவமென்னும் இரு தொடர்பாலும், நடு நண்ணும் = நடுநின்றதாகிய இவ்வுலகத்தைப் பொருந்தும்.

வேதாகமம் விதித்தன செய்தலும், விலக்கியன செய்யாதொழிதலுமே புண்ணியம். இவற்றின் மறுதலையே பாவம். குறித்தகாலம்வரை இன்பதுன்பம் அநுபவித்தற்குரிய இவ்வுலகத்தை யாம் காண்கையால் அவ்வாறு இன்பமே அநுபவித்தற்குரிய சுவர்க்கமும், துன்பமே அநுபவித்தற்குரிய நிரயமும் உண்டென

அநுமிக்கப்படும். நல்வினை தீவினைகள் முறையே பொன் விலங்கு, இரும்புவிலங்குகளுக்குச்சமம் என்றும், சுவர்க்க நரகம் காராக்கிருகத்துக்குச் சமமென்றும் உண்மை நூல்கள் கூறுகின்றன. இவைகளின் நுகர்ச்சி நுகர்ந்தவாறே மீண்டும் பிறத்தல் வேண்டும். உண்மை ஞானமுடையோர் சுவர்க்க பதவியையும் மற்றைய மேலான பதவிகளையும் விரும்பாது, என்றும் மீளா முத்தியையே எய்தத் தலைப்படுவர்.

பசுவியல் முற்றிற்று.

ஆக்ச் செய்யுள் 17.

---

## மூன்றாவது பாசவியல்.

முறையானே பாசவியல் கூறுகின்றார்.

யானென் செருக்கா லிருவினையா மச்செருக்கு
மூனமலத் தானா முயிர்க்கு.

இஃது ஆணவமலத்தின் உண்மை கூறுகின்றது.

(பதவுரை) உயிர்க்கு = ஆன்மாவிற்கு, யானென் செருக்கால் = நான் என்று சொல்லுந்தருக்கினால், இருவினையாம் = நல்வினை தீவினைகளுண்டாம், அச்செருக்கும் = அத்தருக்கும், ஊனமலத்தால் ஆம் = கேட்டை விளைத்தற்குரிய ஆணவமலத்தினாலுண்டாம்.

அநாதியே ஆன்மாவைப் பந்தித்துள்ள இவ்வாணவமலம் ஓர் சடவஸ்து. விஷம், கள் முதலியன ஆன்

மாவை மயக்குவதுபோல், இதுவும் அதனை மயக்கும். கடவுள் இவ்வாணவமலத்தைத் தமது திரோதானசத்தியால் சேட்டிக்கின்றார். இது ஆன்மாவினுடைய இச்சா ஞானக்கிரியைகளை மிகவும் மறைத்து நின்று அநேக விகாரங்களைச்செய்யும். இது ஆன்மாவினுடன் அபேதமாய் நின்று அதனைக் கேவல நிலையில் நிறுத்தும். இது அநுபவமாகிய போகத்தில் இச்சையை விரிவித்து நிற்கும். இது ஆன்மாவிற்குப் பக்குவம் வந்தபோது தன் சத்தியிற் குன்றி நிற்குமே தவிர விட்டு நீங்காது. இது எட்டு முக்கிய குணங்களை யுடையதென உண்மை நூல்கள் கூறுகின்றன.

அவையாவன :— விகற்பம், கற்பம், குரோதம், மோகம், கொலை, அஞர், மதம், நகை என்பவைகளே. இக்குணங்களால் யான் என்கிற அகங்காரமும், அதனால் வினைகளும், அவ்வினைகளால் இன்ப துன்பங்களுமுண்டாம். இம் மூலமலம் தன்னுருவத்தைக் காட்டாது நின்று ஆன்ம ஞானத்தின் மேற் படர்ந்து அதனை ஈனமாகிய இடர்க்கடலின்கண் வீழ்த்தி நிற்குந் தன்மையது. ஆதலால் அதை ஊனமலமென்று கூறினர்.

ஊனம் — ஈனம், கேடு, குறைவு.

செம்பிற் களிம்பென்னச் சிவனோ டுற்றதிமிர்
நம்பனைக்காட் டாதுயிரி னன்கு

இது ஆணவமலத்தின் முக்கியதன்மை கூறுகின்றது.

(பதவுரை) செம்பிற் களிம்பென்ன = செம்பினிடத்தே அநாதி சையோகமாய் நிற்கும் காளிதத்தைப் போல, சீவனோடுற்றதிமிர் = ஆன்மாவினோடு அநாதிசையோகமாய் நிற்கும் இருளாகிய ஆணவமலம், உயிரில் ஆன்ம அறிவில் நம்பனை = தோன்றாத்துணையாய் வியாபித்திருக்கும் இறைவனை, நன்கு காட்டாது = மிகுதியும் அறியுமாறு பிரகாசிப்பிக்கமாட்டாது.

ஒன்றாய் (முற்கூறியாங்கு) எண்ணிறந்த சத்திகளுடன் உயிர்களிடத்து அநாதியே விரவி நின்று பல விகாரங்களைச் செய்வதாயுள்ள ஆணவ மலத்திற்கு மறைப்பு ஒன்றே முக்கிய குணம். அது ஆன்மாவுடன் பெத்த முத்திகளில் நீங்காதே இயைந்து நிற்கும் தலைவனது தன்மையை அப்பிரகாசப்படுத்துமாதலால் "நம்பனை உயிரில் நன்கு காட்டாது" என்றார்.

இனம் பற்றிக் கன்மம், மாயைகளின் றன்மைகளையும் ஒரு சிறிது கூறுவாம்.

கன்மம், மாயை, ஆணவம் இவைகள் மும்மலமென்று அழைக்கப் பெறும். இவைகள் முறையே நெல்லுக்கு முளை, தவிடு, உமிப்போல் உயிரைப் பொருந்தி நின்று, போகமும் பந்தமும், போத்திருத்துவமும் பண்ணுவனவாம். எப்படியெனில்:— நெல்லின் கண்ணுள்ள முளைத்தற் சத்தி முளையைத் தோற்றுவிக்குமாறு போல உயிரின்கண் சுக துக்கங்களைத் தோற்றுவித்தல் கன்ம மலம் போகம் பண்ணுதலாம். முளைத்தற்கு அநுகூலமாய்க் கூடி நிற்குந் தவிடுபோல அச் சுகதுக்கங்கள் பொருந்தி நிற்றற்கு நிலைக்களமாய்த்

முற்போதிற் றன்ப முறுவார்க ளென்ற மறைமொழியைச்
சிற்போத னின்மல வாண னெமக்கிது செப்பினனே. (71)

இருவர் மடந்தையருக் கென்பயனின் புண்டா
மொருவ னொருத்தி யுறின்.

மருளினை நீக்கிய மன்னருட் கீட மகிழ்ந்தனனேல்
இருவர் மடந்தையர் சேரின் பேதுண்டே யின்புளதா
மொருவ னொருத்தி யுடன்கூடி லுள்ள வுறுபயன்போ
லருளி லழுந்திய கன்முதல் சேரின்ப மாவதுவே. (72)

இன்பதனை யெய்துவார்க் கீயு மவர்க்குருவ
மின்பகன மாதலினா லில்.

ஒருவ னொருத்தி யுறிவின் பிருவர்க்கு மொக்குமெனில்
வருவது போல விவனா லவனின்பம் வாங்கிக்கொள்ளான்
றருவ னிவனுக்குத் தன்னரு ளின்பந் தனக்குருவம்
பெருகிய வின்பது வேறு பெறுதிந்தப் பேரின்பமே. (73)

தாடலைபோற் கூடியவை தானிகழா வேற்றின்பக்
கூடலைநீ யேகமெனக் கொள்.

§தாடலை தானது தான்மூன்ற தாகவுந் தான்பிரிந்து
கூடிய சொல்லும் பொருளுங் குறட்குறை வற்றதுபோ
னாடிய சிவன் நேயத்திற் சென்று நயந்தவின்ப
மாடி யழுந்தி யதுவொன்று மாமென் றறைவர்களே. (74)

---

§தான் கண்டு அறியும் ஞாதுரு ஆகிய ஆன்மா தனைகண்டு அறியப்படும் நேயமாகிய சிவம்திருவருளால் இது இதனைக்கண்டு அறியும் காட்சி யறிவே ஞானம். இந்தத்திரிபுடி ஞானவிகற்பம் மூன்றும் இன்றிச் சிவானுபவம் சுவானுபூதிகம் ஆதலே சாயுச்

இது பக்குவம் வருவதற்கு நிகழுங்குறி புணர்த்து நின்றது.

(பதவுரை) ஆவி = ஆன்மாவானது, பரிபாகமாக = ஈசனது திரோதான சத்தியால் பக்குவம் எய்துவதற்கு முற்குறியாய், இருட்பாசமுடை ஊனை = அஞ்ஞானத்தை விளைக்கும் ஆணவமலத்தாலியைந்த அவ்வசுத்த தேகத்தினை, விருப்பற்று = அபிமானத்தின்கணின்று நீங்கி, அருவருக்கும் = அதனை வெறுக்கும்.

ஈண்டு மலபரிபாகமெய்துதலே பக்குவம்; மலம் = ஆணவமலம்; பரி—உபசர்க்கம் பாகம் = பக்குவம், அதாவது ஆணவமலம் பக்குவம் எய்துதலாவது, அது தன் மறைத்தற் சக்தியிற் குன்றி நின்று மற்றோர் பிறவிக்கு ஏதுவாதலின்றியிருத்தலாம். செம்பை ரச குளிகை பரிசித்தவாறே அதனோடு சம்பந்தமுற்ற களிம்பின்றன்மை மாறிப் பொன்னுருப் பெற்றாற் போல, உயிர் மெய்ஞ்ஞானம் பெற்றுழி அதனோடு சகசமாய் நின்ற ஆணவமலசத்தி குன்றிச் சிவமாந் தன்மை எய்தும். காணுஞ்சத்தியுள்ள கண்ணுக்கே சூரியப் பிரகாசம் பயனுறுமாறுபோல், அருட்கண் பெற்றவர்க்கே ஈசன் அறிவிற்கறிவாய் நின்று உபகரிக்கும் உண்மைநிலை விளங்கும். உமி நீங்கிய நெல் முளையாதவாறுபோல, ஆணவமலம் நீங்கிய இவ்வான்மா மீண்டும் பிறத்தற்றொழிலைப் பொருந்தாது. ஆனால் பேரானந்த நிலையாகிய சிவாநுபவமொன்றற்கே சுதந்தரமுடையதாய் அமையும்.

*அப்பொழுது தேசிகனை யாவேசித் தேயமல*
*னப்பழுதை நீக்குமரு ளால்*

(பதவுரை) அப்பொழுது = மலபரிபாகம் வந்தவாறே, அமலன் = நின்மலனாகிய இறைவன், தேசிகனை ஆவேசித்து = குருவை அதிட்டித்து நின்று, அருளால் = தனது அருட்சத்தியால், அப்பழுதை நீக்கும் = பிறவித் துன்பத்தை ஒழிக்கும்.

பதி புண்ணிய விசேடத்தால் இருவினை யொப்பு வந்து—சத்திநிபாதம் பிறந்தவாறே, இறைவனும் மானைக்காட்டி மானைப்பிடித்தாற்போல மானிட உருவங் கொண்டு ஆசாரிய மூர்த்தமாய் எழுந்தருளி வந்து பக்குவம் நோக்கித் தீட்சாவிகற்பங்களிலொன்றால் தீக்ஷித்து, சஞ்சிதத்தைக் கெடுத்து, ஆகாமியம் ஏறு தபடி காட்டித் தேகத்தோடே பிராரத்துவ வினையையும் போக்கி அத்துவித நிலையிற் பொருத்துவன். இத்தே சிகன் திருவருளின்றி அடிசேர் ஞானமாகிய மெய்ஞ் ஞானம் எவ்வாற்றானும் வந்துறாமையைக் கண்டுணர்க.

தீக்ஷையென்பது மும்மலத்தை விட்டி முத்தியை விளைவித்தற்குரிய சிவஞானத்தைப் பயப்பதாம். மல பரிபாகம் பலவகைப்படுதலின் தீக்ஷையும் பலவகைப் படும். அவையாவன:- சட்சு தீட்சை, பரிச தீட்சை, வாசக தீட்சை, சாஸ்திர தீட்சை, யோக தீட்சை, ஔத்திரி தீட்சை என்பன. இதன் பரப்பையெல்லாம் ஆசாரியர் முகமாய்க் கேட்டுணர்க.

*நீங்கவிரு ணீங்காதே நின்றசிவங் கண்டாவி*
*யோங்கியபே ரின்பத்து றும்.*

இஃது ஆணவமலம் நீங்கியவாறே ஆன்மா எய்து நிலையுணர்த்துகின்றது.

(பதவுரை) இருள் நீங்க = ஆணவமல மறைப்பி னுலுண்டான அஞ்ஞானம் நீங்க, நீங்காதே நின்ற சிவம் = தனக்குத் தோன்றாத் துணையாய்ப் பெத்தமுத்திகளி னும் வியாபித்து நிற்கும் இறைவனை, ஆவி கண்டு = ஆன்மாவானவன் தன்னுள்ளே அகண்டாகாரப் பே ரொளியாய்க் கண்டு, ஓங்கிய பேரின்பத்துறும் = பர மானந்த சாகரத்தின்கண் பொருந்தி யின்பமனுபவிக் கும்.

அநாதி சையோகமாகிய ஆணவமலத்தின் வாத னையுங்கெட்டு நிற்றலே ஈண்டு இருள் நீங்கலாம். ஈசன் பெத்த முத்திகளினும் தோன்றாத்துணையாய் நிற்போ னதலால் "நீங்காதே நின்ற சிவம்" என்றுகூறினர். சிவபோகத்துக்கு மேலொரு ஆனந்த மின்மையால் "ஓங்கியபேரின்பமென" விசேடித்தார்.

மற்றைய பதமுத்திகளெல்லாம் கீழ்நோக்கிப்பார்க் குங்கால் ஒன்றற் கொன்று குறைந்தவைகளேயாம்.

பேரின்பத்தின்கண்ணுறுதலாவது— தாடலை (தாள்—தலை) போலாக அத்துவித நிலையின்கண்ண டங்கி நின்று இன்பமே சொரூபமாகிய சிவபோகத்தில் சுவாநுபவம் எய்தி நிற்றலாம்.

அநுக்கிரகவியல் முற்றிற்று.

ஆகச் செய்யுள் 22.

ஆக்கைசிறை என்றமலத் தாதரவுற் றோர்க்கிந்த
வாக்கை யறைக மதித்து.

இந்நூலை ஏற்றற்குரிய அதிகாரி இவரெனத் தெரிவிக்கின்றார்.

(பதவுரை) ஆக்கை சிறையென்று = சப்ததாதுக்களால் இணைக்கப்பெற்ற இத்தேகம் ஓர் காராக்கிருகமென்றெண்ணி வெறுத்து, அமலத்து = நின்மலத்துவத்தின்கண், ஆதரவுற்றோர்க்கு = விருப்பமுடையவர்களுக்கு, இந்தவாக்கை = பதி பசு பாசத்தொகையென்னும் இந்த ஞானசரித்திரத்தை, அறைக = சொல்லக்கடவர்கள்.

பக்குவியல்லார்க்கு இதனை உரைத்தல் விழலுக்கிறைத்த நீர்போல யாதொருபயனும் பயப்பியாது இடர்ப்பாட்டின்கண் வீழ்த்துமாதலால் ஈண்டு இவ்வாறு கூறுவாராயினர்.

விடம்பர்க் குரைத்தார் விழுவர்கீழ் மேலே
யடைந்தார்நல் லார்க்கறிவித் தார்.

இது பக்குவர், பக்குவரல்லாதாராகிய இவர்களுக்கு அறிவித்தார் எய்தும் பயன் கூறுகின்றது.

(பதவுரை) விடம்பர்க்கு = துற்சனர்களாகிய அபக்குவிகளுக்கு, உரைத்தார் = சொல்லிய ஆசிரியர், கீழ் விழுவர் = நரகத்தின்கண் வீழ்ந்து அழுந்துவார்கள், நல்லார்க்கு = பக்குவமுடையவர்களுக்கு, அறிவித்தார் = சொல்லியருளிய ஆசிரியர், மேலடைந்தார் = சிவலோகத்தையடைந்தவராவர்.

ஆசிரியராவார், அபக்குவர்களைத் தம்மிடத்து அன்பும், அவர்களிடத்து அருளுங்கொண்டு தள்ளல் வேண்டும். இன்றேல் இவ்விருவரும் நரகில் வீழ்ந்து அழுந்துவர்கள். அதினின்றும் ஏறல் முடியாதென்று உண்மை நூல்கள் கூறுகின்றன.

இந்தவியலைத் திரிவு மின்றியுணர்ந் தார்க்கிருண்ட
பந்தமறும் வாய்த்துறுமின் பம்.

இது இந்நூலுணர்ந்தார் அடையும் பலன் கூறுகின்றது.

(பதவுரை) இந்த இயலை = ஞானத்தைக்கூறும் இந்தப்பகுதியை, திரிவுமின்றி = பொருள் வேறுபாடுமின்றி, உணர்ந்தார்க்கு = நன்றாய் அறிந்த சாதுக்களுக்கு, இருண்ட பந்தமறும் = அநாதியே தம்மைப் பொருந்திய அஞ்ஞானமாகிய பாசப்பிணிப்பு நீங்கும், இன்பம் வாய்த்துறும் = பேரானந்த அநுபவங்கிட்டும்.

திரிவுமென்ற உம்மையால் சந்தேகமும், அறியாமையுங் கொள்ளப்படும். இவை மூன்றும் முத்திவிக்கினங்களென்று கூறப்பெறும்.

இயல், ஓத்து, பகுதி என்பன ஒருபொருட்சொற்கள்.

ஆகச் செய்யுள் 25.

சுபம்.

பதி பசு பாசத்தொகை முற்றிற்று.

மெய்கண்டதேவன் திருவடி வாழ்க.

உ

சிவமயம்.

**கொற்றவன்குடி**
**உமாபதி சிவாசாரியசுவாமிகள்**
இயற்றியருளிய
**திருவருட்பயனும்**

**தருமபுரம் ஆதீனத்து முனிபுங்கவர்களில்**
ஒருவராகிய
**காவை அம்பலவாணர்**
இயற்றியருளிய

# உதாரணக் கலித்துறையும்

திருக்கைலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீனம்
உசு-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ
**சண்முகதேசிகஞானசம்பந்த பரமாசாரிய**
**சுவாமிகள் கட்டளையிட்டருளியபடி**

ஷை ஆதீன வித்வச்சிகாமணி பரங்கிப்பேட்டை
ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை
அவர்களால் பரிசோதிக்கப்பட்டு

ஷை ஆதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர்
தேவஸ்தானம் கட்டளைவிசாரணை
ஸ்ரீமத் இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகளால்

சீர்காழி ஸ்ரீ அம்பாள் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.

பிரதி ] 1940 [ 1000.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவருட்பயன்—உதாரணக்கலித்துறை.

---

## கணபதி வணக்கம்.

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக்கன்று காண.

நற்குஞ் சரக்கன்றை நண்ணிடிற் போதர்க்கு நல்லின்பமாங்
கற்கும் கலைகள் கருதிலர் காண்கதி வேண்டினர்க்குச்
சற்குரு மாபதி சாற்று மருட்பயன் சார்விதியி
னிற்கும் துணையரு ணின்றே பெருகு நிரம்பிடவே.

## நூல்.

## க— பதி முது நிலை.

அகர வுயிர்போ லறிவாகி யெங்கு
நிகரிலிறை நிற்கு நிறைந்து.

அகர முதலுள வக்கரங் கட்குநல் லவ்வெழுத்து
பகரு முயிரெனும் பண்பது போற்பல் லுயிர்கட்கெல்லா
நிகரி லிறையறி வாகி நிறைந்தெங்கு நின்றதனைச்
சிகர மறையது செப்பிய வாய்மை தெளிந்துகொள்ளே. (1)

தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி
பின்னமிலா னெங்கள் பிரான்.

தன்னிலை யாயுள்ள தற்பர வின்பத்திற் சாரவுயி
ருன்னி யருளிய சத்தி யுடனங்கு மோங்கியெங்கும்
கன்னி யவளென்றுங் காரணன் தான்சிவ யோகியென்றுஞ்
சென்னி மறைகளிற் செப்பிய வாய்மை தெளிந்துகொள்ளே. (2)

பெருமைக்கு நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றி
னருமைக்கு மொப்பின்மை யான்.

பெருமைக்குத் தானு மிகவே பெருமை யுடையபிரா
னுருமைக்கு நட்பத்தி னுட்பமா யெங்குமே யோங்கிநின்றே
னிருமைக்கு மின்பத்தி னின்பமென் றுதவற் கின்பமில்லா
தருமைக்கு மொப்பின்மை யானவன் காணெங்கு மாயவனே. (3)

ஆக்கி யெவையு மளித்தா சுடனடங்கப்
போக்குமவன் போகாப் புகல்.

ஆக்குவன் பல்லுயி ரெல்லா மிகவு மகமகிழ்ந்தே
யூக்கம் பெருக வுளபோக மூட்டுவ னுற்றடங்கப்
போக்குவ னசுடன் போக்கிவ னெங்கணும் போக்குமிலா
நீக்க மிலாமை நிராதார மாய்நிற்ப னின்மலனே. (4)

அருவு முருவு மறிஞர்க் கறிவா
முருவ முடையா னுளன்.

அருவாகி யுள்ள திருமேனி நாலு மருவுருவ
முருவான தொன்று முருமேனி நாலு முகந்துமன்பாம்
பெருவாழ்வு பெற்றவர் பேரறி வேதினம் பெற்றுநிற்குங்
குருவா லுணர்ந்தவர் கொள்வர்கள் மற்றவர் கூறரிதே. (5)

பல்லா ருயிருணரும் பான்மையென மேலொருவ
னில்லாதா னெங்க ளிறை.

பல்லா ருயிர்த்தொகை பற்றி யொருவன்றன் பான்மைகொண்டே
நல்லா ரறிவர்க ளுடைநி யானுக்கு நாடுமுரு
வில்லாத வெம்$முக வின்றி யிருப்பனே யேதுமில்லா
னெல்லாமும் வல்லவன் மேலொரு தேவில்லை யெம்மிறைக்கே.(6)

ஆனு வறிவா யகலா னடியவர்க்கு
வானுடர் காணுத மன்.

நீங்காத பேரறி வாகி யடியவர் நெஞ்சகத்தே
பாங்காக வீற்றிருப் பாரவ ரின்பப் பரவையதாய்த்
தூங்காத வானவர் தொல்லைப் பலதொலை யாவுயிர்க
டாங்காண வல்லவ ரோவுடை யானடித் தாமரையே. (7)

எங்கு மெவையு மெரியுறுநீர் போலேகந்
தங்குமவன் றனே தனி.

எங்கு மெவையு மெரியுறு நீரொன் றியைக்துயிர்க்குத்
தங்கும் வினைவழி தான்போக்கி வேறெனச் சார்ந்துநிற்கு
மங்கங்குச் சங்கர னுக்கினை யேநின் றதுசெலுத்து
மிங்கு மிதுவே பரம்பொரு ளொப்பற்ற தென்பர்களே. (8)

நலமில னண்ணுர்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர்சங் கரன்.

நண்ணு தவர்களை நாடில னல்ல நலமுங்கொண்டான்
கண்ணுன வன்பர் கருத்தி லுறைவன் கருதிவந்த
விண்ணுடர் வேண்ட விகற்பமில் லாமல் விருப்பளிப்பன்
தண்ணா னுண்மைத் தனிப்பொரு ளாம்பெயர் சங்கரனே. (9)

உன்னுமுள தைய மிலதுணர்வா யோவாது
மன்னுபவந் தீர்க்கு மருந்து.

---

$ உகல்—கேடு.

உன்னீ ரொருபொரு ளுள்ளது காணு முகந்துமன்பாய்ப்
பன்னீ ருமக்கையப் பாடில தாயது பாங்கதுவா
மன்னீர் மரண பவங்களைத் தீர்க்கு மருந்ததுவா
மென்னீ ருயிர்க்குயி ரென்னீர் மிகவு மினிதெனவே. (10)

பதி முது நிலை முற்றிற்று.

---

## 2-வது*உயிரவை நிலை.

பிறந்தநாண் மேலும் பிறக்குநாள் போலுந்
துறந்தோர் துறப்போர் தொகை.

உயிர்த்தொகை யோர்க ளுதிக்கின்ற நாளுக்கு மோங்கியுமே
லயிக்கப் படுகின்ற நாளுக்கு மெங்கு மளவிலபோற்
செயிக்கத் துறந்து சிவனை யடைந்தனுஞ் செப்பரிதாங்
கயக்கத் துறக்கின்ற பேர்க்குந் தொகையில்லை கண்டுகொள்ளே.(11)

திரிமலத்தா ரொன்றதனிற் சென்றார்க ளன்றி
யொருமலத்தா ராயு முளர்.

ஆணவ மாயை யருவினை யாங்குள ராஞ்சகலர்
பேணிய கன்மம் பெரிதா ணவம்ப்ரள யாகலர்க்குக்
காணிரு ளொன்றேவிஞ் ஞான கலைக் கலந்ததென்று
தாணுவி னேருரை சாற்றிடும் காண்மறை தன்னிலையே. (12)

மூன்றுதிறத் துள்ளாரு மூலமலத் துள்ளார்க
டோன்றலர்‡தொத் துள்ளார் துணை.

---

* பசு நிலை எனவும் பெயர்.

‡ தோற்றுவ்ளார் என்றும் பாடம்.

மூன்று திறத்தினன் மாக்களுக் காணவ மூலமதி
யேன்று மறைக்கு மிவர்க்குடற் போக மிறையறிந்து
தோன்றாத் துணையென நின்றது தன்னையுந் துய்ப்பித்தபி
னன்ற வடிமைக் கருளா ரமுத மருத்துவனே. (13)

கண்டவற்றை நாளுங் கனவிற் கலங்கியிடுந்
திண்டிறலுக் கென்னோ செயல்.

கனவினிற் கண்டதை நாளுங் கனவி னயர்ந்தறியா
நினைவனை நீயறி வென்றுரைத் தாய்நிறைந் தாணவத்தின்
புனைவன கேவலத் துள்ளே கருவி பொருந்தறியா
மனவன சேதன னாக வுளத்தின் மதித்தறியே. (14)

பொறியின்றி யொன்றும் புணராத புந்திக்
கறிவென்ற பேர்நன் றற.

பொறியின்றி யாங்குள போகத்தைக் கண்டு பொருந்தியதைச்
செறியு முடலன்றிச் சேர்வறி யார்செய லாவதென்னோ
பிறியுங் குணத்திற் பிரகிரு தாகிப் பெருமயக்க
முறுவ னிவனை யறிவென்ற பேரை யொழித்திடுமே. (15)

ஒளியு மிருளு முலகு மலர்கட்
டெளிவி லெனிலென் †செயல்.

ஒளியாம் பலவு மிருளுட னுள்ள பொருள்களையுந்
தெளிவாம் விழியிலா ரோர்வதென் னோதெளிந் தாங்கதுபோ
லளியா மருளையும் போகந் தனையு மறிந்துணர
வெளியாம் பொருளுயி ரீங்கினு வென்று விரைந்தறியே. (16)

† செய என்றும் பாடம்.

சத்தசத்தைச் சாரா தசத்தறியா தங்கணிவை
§ யுற்றசத சத்தா முயிர்.

சத்திது வென்று மசத்தறியா சத்துத் தானசத்தை
யொத்தறி யும்படி யுத்தமன் வேண்டி லுயிரவைதான்
வைத்திடுஞ் சத்தை யசத்தையுங் கூடி வகையறிய
நித்திய மாஞ்சத சத்தாகு மென்று நிகழ்த்துவரே. (17)

இருளி னிருளாகி யெல்லிடத்தி னெல்லாம்
பொருள்க ¶ ளிலவோ புவி.

இருளாகி நிற்கவு மெல்லாகி நிற்கவு மீங்கினிதாம்
பொருள்க ளிலையோவிப் பூமி யகத்தினிற் போதவுண்டு
தெரியும் படிகமு மாகாசந் தானுந் தெளிந்தகண்ணு
மருளுஞ் சிவாகமந் தன்னி லதனை யறிந்துகொள்ளே. (18)

ஊமன்கண் போல வொளியு மிகவிருளே
வாமன்கண் காணாத வை.

கோட்டான் றனக்குக் கதிர்கூ ரிருளெனுங் கொள்கையைப்போற்
காட்டா துயிரை மலமறைத் தார்தலின் காண்பரிதாந்
தீட்டா மிருந்த வுயிர்களுக் கெத்திற் றெளியுமிருள்
ஆட்டானுங் கொள்வ னவனியில் வந்தங் கருளுவனே. (19)

அன்றளவு மாற்றுமுயி ரந்தோ வருடெரிவ
தென்றளவொன் றில்லா விடர்.

---

§ யுய்த்தல் என்றும் பாடம்.

¶ இலதோ என்றும் பாடம்.

அன்றே தொடங்கியு மின்றள வாக வருந்துயரங்
குன்றாத வாறு பெருகிய கோமுதல் கூடலன்றே
நின்றே யுயிரி னிறைதுய ரான து நீங்கலன்றோ
வென்றான் கருணை பிரியா திறையவ னீக்குகின்றே. (20)

உயிரவைநிலை முற்றிற்று.

---

## 3-வது $ இருண்மலநிலை.

துன்றும் பவத்துயரு மின்புந் துணைப்பொருளு
மின்றெனப தெவ்வாறு மில்.

ஆணவந் தானு மறியாமை துன்னு மளவில் சத்தி
பேணிய மாக்கள் பிறவித் துயரமும் பேரின்பமுந்
தாணுவுந் தன்னையு மெந்த விதத்தினுந் தான்மறைத்துக்
* கோணதி னிற்கு மிருட்கோலந் தன்னையுங் கூறரிதே. (21)

இருளான தன்றி யிலதெவையு மேகப்
பொருளாகி நிற்கும் பொருள்.

இருளான தெப்பொரு ளெல்லா மடக்கியு மேகமெனப்
பொருளாங் கருமையைக் காட்டிய தேற்பொற் பெலாம்பெருக
வருளா வகையுயிர் கேவல மென்ன வுரைத்தபின்னுந்
தெருளா வுருவு தமல வுருவெனச் செய்திடுமே. (22)

ஒருபொருளுங் காட்டா திருளுருவங் காட்டு
மிருபொருளுங் காட்டா திது

---

$ பாசநிலை எனவும் பெயர்.
* கோண்—வளைவு,

பூத விருட்டுப் புதுமை யேதுண்டு பொருளடக்கும்
பேத மிலாமற் றனைப்பெறக் காட்டிய பெற்றியென்னே
காதன் மணாளன் றனைக்காட் டிடாது கருத்தைமறைத்
தோதிய தன்னையுங் காட்டா திதற்கது வொப்பலவே. (23)

**அன்றளவி யுள்ளொளியோ டாவி யிடையடங்கி**
**யின்றளவு நின்ற திருள்.**

அன்றே தொடங்கியு மின்றள வாக வருளுயிரை
நன்றாய் வினைவழி நாடி நடத்தினு நல்கியிரு
ளொன்றாந் தனையு முயிரையுந் தானு முணர்வரிதா
யின்றே யளவுள திப்பே ரிருளி னியல்பிதுவே. (24)

**பலரைப் புணர்ந்துமிருட் பாவைக்குண் டென்றுங்**
**கணவற்குந் தோன்றாத கற்பு.**

பல்லுயிர் சேரப் பரந்தும் புணர்ந்துமப் பாசவிருள்
வல்லிக்கு முண்டொரு வல்லமை தான்மண வாளனுக்கு
மில்லைப் பெரிதின் பினியசிற் றின்பமு மென்றுகந்து
சொல்லத் தகவுள கற்புடை யாளிந்தத் தோகையளே. (25)

**பன்மொழிக ளென்னுணரும் பான்மை தெரியாத**
**தன்மையிரு ளார்தந் தது.**

பன்மொழி யேது பலகா ளினைந்து பகர்வதெது
நன்மொழி யீசன் வினைவழி யூட்டி நடத்துகினுந்
தன்மொழி யின்வழி தப்பா தருமெனத் தானடக்கும்
புன்மொழி யாணவப் பேரிருள் தந்த புதுமையதே. (26)

**இருளினதேறற் றன்பே னுயிரியல்பேற் போக்கும்**
**பொருளுண்டே லொன்றாகப் போம்.**

இன்றே யிருளது மாயை வினைகளு மேயுளதா
மன்றே மறைப்பிலை யாகி லரிய வினைதுயரே
னென்றீ யிதற்கியல் பேதுகா ணென்னினைப் போக்குமரு
ளொன்றாகப் போமினி யுன்மொழி தன்னை யுவந்தறியே. (27)

ஆசாதி யேலணைவ காரணமென் முத்திநிலை
பேசா தகவும் பிணி

ஆதியி லேவந் தசாவா மிருளென் றறைந்தனையே
லோதிய மாசங் குறுவது வேனுண ராமொழிகா
ணீதியிற் சுத்த நிலைபெற்ற முத்தியி னோர்வதுவாஞ்
சோதியிற் றானிரு டோன்றாத வாறு துணிந்துகொள்ளே. (28)

ஒன்றா மிகினு மொளிகவரா தேலுள்ள
மென்று மகலா திருள்.

எங்கெங்கு மாகி யெழுந்ததெல் லாமிரு ளேமறைக்கின்
பொங்கின் விளக்கின் புலப்படு மோவந்தப் போக்கதென
அங்குள மேவ வுரிய கலைவிளக் காலலது
தங்கு மிருளது தானக லாதென்று சாற்றுவரே. (29)

விடிவா மளவும் விளக்கனைய மாயை
வடிவாதி கன்மத்து வந்து.

பெருகு மிருட்கு விளக்காற் றொழில்பெற்ற பேறதுவு
மருவு மிருட்குக் கலைவிளக் காம்வடி வாதிவினை
யிருவகை யாலு மிருள்கெட ஞான மெழுந்துமிகும்
பருதி யுதிக்க விருட்போம் விளக்கின் பயனிலையே. (30)

இருண்மலநிலை முற்றிற்று.

## 4-வது அருளது நிலை.

அருளிற் பெரிய ‡ தகிலத்தில் வேண்டும்
பொருளிற் றலையில்லது போல்.

மருளில் மறைபட்டு மாதர்பொன் மண்மயக் காம்பொருளிற்
பெரியதில் போலப் பொருளா மதனைப் பெரிதெனவே
பொருவி லறிவிற் பொருந்தி யறிவ பொருளதனூற்
தெரியத் தெரிந்திடு மோமறைப் பீதென்று செப்பரிதே. (31)

பெருக்க நுகர்வினை பேரொளியா யெங்கு
மருக்கனென நிற்கு மருள்.

உலகத் துளோர்க ளுறுந்தொழிற் காதித்த னுற்றெழுந்து
நிலைபெற்ற பேரொளி நிற்பது போல நிறைந்தருளி
னலைவற் றருள்வ துயிர்க்குள போக மருத்திநிற்கும்
பெலமுற்ற நேயர் கருணைப் பெருக்கென்று பேசுவரே. (32)

ஊனறியா தொன்று முயிரறியா தொன்றுமிவை
தானறியா தாரறிவார் தான்

பாச மிலதாக மாயை யுயிரின்றிப் பற்றரிதா
மோசை யுயிரது தானுக வொன்றை யுணர்வரிதாம்
பேசும் வினைவழி யூட்டி யதனிற் பிறிந்துநிற்கு
நேச வருளது நீங்காது பெற்றவர் நேசிப்பரே. (33)

பாலாழி மீனுளும் பான்மைத் தருளுயிர்கண்
மாலாழி யாளு மறித்து

---

‡ அகிலத்து-என்றும் பாடம்.

பாலாழி யிற்பல மீனினம் பாற்சுவை தானறியாச்
சேலாம் பெரிய சிறியதைத் தின்னுமச் செய்கையருண்
மேலாழி மேவிய மாக்க ளதனில் விருப்பமிலா
மாலாழி யாழ்வர் கருக்கட லென்னு மடுவுறவே. (34)

அணுகு துணையறியா வாற்றேனி லைந்து
முணர்வை §புணரா துயிர்.

அணுகு துணையை யறியாத வைந்து மணுவழியாய்
நணுகும் பொறியது போல வுயிருட னுடரிதாய்ச்
செணுகும் பொறிவழிச் சிற்றின்பச் சேற்றினிற் சென்றுபினு
மெணுகு மெரிவாய் நரகெய்தி ¶யந்தி லிருளுறுமே. (35)

தரையை யறியாது தாமே திரிவோர்
புரையை யுணரா புவி.

பூமே லதனைப் பொருந்தித் திரிந்ததைப் புந்திசெய்யா
தாமே திரிபவர் போலே நினைப்பவர் தன்னறிவாற்
கோமா னுயிர்க்குப் பதியரு ளென்றதைக் கொள்ளறியார்
காமே சொலிலறி யாமையி னுலவர் நாடரிதே. (36)

மலைகெடுத்தோர் மண்கெடுத்தோர் வான்கெடுத்தோர்
தலைகெடுத்தோர் தற்கேடர் தாம். [ ஞானங்

மலையது தன்னி லிருந்தது தாரக மாயிலர்மண்
டலையது தன்னி லிருந்தது தாங்கலைத் தாமுணரார்
நிலையது வானிடை நின்று மதனை நினைக்கிலர்போற்
கலைவல னீசன் கருத்திற் கருத்தென்று கண்டுகொள்ளே. (37)

---

§ உணரா உயிர் என்றும் பாடம்.

¶ அந்தில்—அவ்விடத்தில்.

வெள்ளத்து ளுவற்றி யெங்கும் விடிந்திருளாங்
கள்ளத் †தலைவர் கடன்.

பெருகிய வெள்ளந் தனையிழப் பாரவர் பேதைமையும்
பருதி யுதிப்பவுங் கண்ணிலர் பாலமை பாசவிருண்
மருவி யதனின் மறைபட்டு மாதர்பொன் மண்மயக்கா
லருளா து நீர்ப்பெருக் காகி யிருக்கு மறிந்திலரே. (38)

‡பரப்பமைந்து கேண்மினிது பாற்கலன்மேற் பூனை
கரப்பருந்த நாடுங் கடன்.

பரப்பே யமைந்து மினியது கேட்பது பண்புடைய
வுரப்பே யுறுமவர்க் குள்ளது காணுத் துணர்வமெனின்
நிரப்பே யமர்பாற் கலனேறிப் பூசைநின் றேயருந்தா
கரப்பேயு நாடி யிரண்டு மிழந்தது கண்டிலரே. (39)

இற்றை வரையியைந்து மேதும் பழக்கமிலா
வெற்றுயிர்க்கு வீடு மிகை.

அன்றே தொடங்கியு மின்றள வாக வருள்பெருக்கி
நின்றே யுளமதி னீந்தார்க ணல்ல நிலைமைபெறார்
சென்றே சுவர்க்கமுந் தீநர குஞ்செக மும்பெறுவ
ரொன்றே பெறாதது பேரின்ப வீடென்று மோதுவரே. (40)

அருளது நிலை முற்றிற்று.

---

† இறைவர் என்றும் பாடம்.

‡ பரப்பமைந்த என்றும் பாடம்.

## 5-வது அருளுரு நிலை.

அறியாமை யுண்ணின் றளித்ததே காணுங்
குறியாகி நீங்காத கோ.

அன்றே தொடங்கி யருவினை யாலளித் தேயறிவாய்
நின்றே யிருளற நீக்க மிலானரு ணீங்கிவந்தே
யொன்றே பொருளென வோதியெங் கெங்கு முவமையிலாக்
குன்றே யெனநிற்குங் கோவாகு மிந்தக் குருபரனே. (41)

அகத்துறுநோய்க் குள்ளின ரன்றி யதனைச்
சகத்தவருங் காண்பரோ தான்.

உளத்துறு பாசத் துறுபிணி தன்னை யுயிர்க்குயிராய்
வளத்தவ னன்றிமற் றாரறி வாரவர் வந்தருளுஞ்
சளத்தினைப் போக்கியுஞ் சையோக மாக்கியுஞ் சாயுச்சிய
மளிப்பவன் றன்னையு மாரறி வாரிவ் வவனியிலே. (42)

அருளா வகையா லருள்புரிய வந்த
பொருளா ரறிவார் புவி.

சொல்லாமற் சொல்லியுஞ் செய்யாமற் செய்யச் சுகமருள்வான்
கல்லாய நெஞ்சங் கனியாக்கி யேகருத் திற்கருத்தா
யெல்லா நமது செயலெனு வேயிங் கெமக்கருள
வல்லானை யாரறி வார்புவி மீதினில் மானிடரே. (43)

பொய்யிருண்ட சிந்தை பொறியிலார் போதமா
மெய்யிரண்டுங் காணார் மிக.

பாச விருளின் மறைப்புண்ட மாக்கள்பஞ் சேந்திரிய
வாசல் வழியின் மயங்கிடு வோரருண் மன்னியிருள்

---

சளம் = வியாதி, துன்பம்.

பேசு முருவையும் பேசா வுருவும் பிறித்தறியார்
காசினி யோர்செய்யுங் காரிய மிப்படி கண்டதுவே. (44)

பார்வையென ¶ மாக்களைமுன் பற்றிப் பிடித்தற்காம்
போர்வையெனக் காணார் புவி.

மான்காட்டி மானைப் பிடிப்பது போலிங்கு மானிடராய்த்
தேன்காட் டுருவஞ் செகத்தினில் வந்தெனைச் சேர்ந்தருளா
லூன்காட்டி யூனுக்கு வேறுயிர் காட்டி யுயிர்க்குயிராங்
கோன்காட்டு மேனியை யாரறி வாரிக் குவலயத்தே, (45)

எமக்கெ னெவனுக் கெவைதெரியு மவ்வத்
தமக்கவனை வேண்டத் தவிர்.

எமக்கெ னெவனுக் கெவையே தெரியு மிருவினைநோய்
தமக்கே யினியென்று சர்ப்பத்தின் வாயிற் றவளைபொப்பார்
சுமக்கே னுடல்சுமை யென்றே குருவினைச் சூழ்ந்திடுவார்
தமக்கே யுடனல மென்றே பிறருக் கமைப்பர்களே. (46)

விடநகுல மேவினுமெய்ப் பாவகனின் மீளுங்
கடனிலிருள் போவதெவன் கண்.

விடந்தொடிற் கீரியை மெய்யினிற் சேர்த்திடின் மீள்வதுண்டோ
வடந்தொரு கீரியைப் பாவிக்கின் மீளு மதுதனைப்போல்
கடந்தருண் ஞானங் கருணை யுருக்கொண்டு காசினியில்
தொடர்ந்து வரினன்றித் தோன்று வினையைத் துடைக்கரிதே. (47)

அகலத் தருமருளை யாக்கும்வினை நீக்குஞ்
சகலர்க்கும் வந்தருளுந் தான்.

---

¶ மாக்களைப்பற்றி, என்றும் பாடம்.

ஒருமலத் தாருக் குளத்தறி வாகி யுடலொழிப்ப
னிருமலத் தாருக் கிடபத்தின் மீதி னெழுந்தருளிக்
கருமலந் தாக்கா தழிப்ப னுடலைக் கருவணைந்த
திரிமலத் தாருக்குத் தீர்ப்ப னுருக்கொண்ட தேசிகனே. (48)

ஆரறிவா ரெல்லா மகன்ற நெறியருளும்
பேரறிவான் வாராத பின்.

நீர்நிழல் போலவு மெங்குநின் றுணினை யாமறவாப்
பேரறி வாள னுளத்துப் பிணியைப் பெரிதறிந்து
சார்வறச் சார்ந்தவ னேவந் ததனைத் தவிர்ப்பதல்லா
லாரறி வாரிவ் வுலகி லதற்கிங் கவுடதமே. (49)

ஞான மிவனொழிய நண்ணியிடு நற்கலனல்
பானு வொழியப் படின்.

ஞான மிவனை யலாது நயக்கு மெனநவிலு
மூன மொழிய வுரைப்பவுங் கேளுயர் காந்தத்தனல்
பானுவை யன்றிப் படுமோ படவுளம் பற்றுமருள்
கோனுருக் கொண்டிங் கருளான்மெய்ஞ் ஞானக் கொழுந்தெழுமே.

அருளுருநிலை முற்றிற்று. (50)

---

## 6-வது அறியு நெறி.

நீடு மிருவினையு நேராக நேராதல்
கூடுமிறை சத்தி கொளல்.

பெரிதா யிருவினை தொன்றுதொட் டேமிகப் பெற்றதெல்லா
மொருகாலத் தேயு முவப்பற் றிரண்டினு முற்றுமிக

வருமே யழிவில் சிவபுண் ணியத்தில் மலவிருள்போய்க்
குருவா லருள்பெற்ற சத்தினி பாதமுங் கூடிடுமே. (51)

ஏக னநேக னிருள்கரும மாயையிரண்
டாகவிவை $யாறுதி யில்.

மதியொடு மெண்ணிலி மாக்களும் பாச விருளுடனே
சதிசெயுங் கன்மமுஞ் சார்மாயை மாயையுந் தானெண்ணியே
மதியொடு மாறு மனுதியென் றேயும் வகுத்துரைப்பர்
கதியொடு மாகமங் கற்றுணர்ந் தோர்திறங் கண்டதுவே. (52)

செய்வானுஞ் செய்வினையுஞ் சேர்பயனுஞ் §சேர்பவனு
முய்வா னுளனென் றுணர்.

செய்வான் றனையுஞ் செய்வினை யானதுஞ் சேர்பலனு
முய்வா னொருவ னுடங்கிதின் றேயு முயிர்க்குயிராய்
மெய்வாய்கண் மூக்கு மிகுசெவி சிங்ஙுவை வேண்டுபொரு
ளைவாய் வழியி லருத்துவ னென்று மறிந்துணரே. (53)

ஊனுயிரால் வாழு மொருமைத்தே யூனுடயிர்
தானுணர்வோ டொன்றாந் தரம்.

ஊனுயி ராகியு மொன்றுபட் டேமிக வொத்ததுபோற்
றானுந் தலைவனுந் தன்னிற் கடந்துட றன்மைவிட்டுப்
பானுவு நோக்கும் பரந்து கலந்திடும் பண்பதுபோற்
கோனுடன் கூடிய சீவனு மங்குக் குலாவிடுமே. (54)

தன்னிறமும் பன்னிறமுந் தானுங்கற் றன்மைதரும்
பொன்னிறம்போன் மன்னிறமிப் பூ.

---

$ யனுதியில் என்றும் பாடம்.
§ சேர்ப்பவன் என்றும் பாடம்.

*ஆதித்தன் ருனு மரிய படிகத் தடுத்ததுவாய்ப்
பேதிப் $பரப்பற்ற பேராத தோய்வரும் பெற்றியைப்போல்
சோதி யுளத்திற்குச் சூழ்ச்சியிற் போகமுந் துய்க்கச்செய்து
நீதி யிதமகி தத்தினி னீங்குவ னின்மலனே. (55)

கண்டொல்லே காணுநெறி கண்ணுயிர் நாப்பணொளி
யுண்டில்லே யல்லா தொளி.

கண்ணுக் கொளியது முன்புள தாயினுங் கண்ணடுவே
உண்ணின் றுயிரு முணர்த்திலுண் டாகு முளதிலபோல்
நண்ணு முயிர்க்கு நடுவருள் காட்டி நயந்தறியும்
எண்ணி லறிந்திடு மோவறி யாதொன் றியம்பிடுமே. (56)

புன்செயலி ளேடும் புலன்செயல்போ னின்செயலே
மன்செயல தாக மதி.

புன்செய லாகிய லோகத்தி லோடும் புலன்களேப்போன்
மன்செய றன்னின் மனமறத் தானற மன்னிநின்று
முன்செய லாகிய முன்னிலேச் சுட்டு மொழியவரு
டன்செய லாமென் றறிஞர்கள் சாற்றுந் தகைமையதே. (57)

ஓராதே யொன்றையுமுற் றுன்னுதே நீமுந்திப்
பாராதே பார்த்ததனேப் பார்.

---

*உச்சிப் போதில் சூரியப்பிரகாசம் பெற்ற படிகத்தூண் இருள்பரப்பு முதலிய பேதிக்கின்ற நிறங்களே அடையாதபெற்றியால், "பேதிப்பரப்பற்ற" என்ருர். சூரியப்பிரகாசம் அந்தப் படிகத்தை விட்டு நீங்காத பெற்றியால் "பேராத" என்ருர். அந்தப் படிகம் பலவர்ணங்களேக் கலவாத்தன்மையால் "தோய்வரும்" என்ருர்.

$ பரப்பு—வியாபகம்.

ஓரா திருவென்று முன்னு திருவென் றுரைத்தபடி
நேராக நீயு நினைப்பறத் தானிறை நிற்பதுபோல்
பாரோர் பரம்பொரு ளுள்ளத் துணர்வாய்ப் பரந்தவின்ப
மாரா வமுதென நின்றே யருந்த வளித்திடுமே. (58)

களியே மிகுபுல மாய்க்கருதி ஞான
வொளியே யொளியா வொளி.

§களப்படு கத்தை கண்டுதற் போதங் கருதினர்க்குச்
சளப்படு பாச வினைசார்ந்து மாவி தயங்குமென்று
மளப்பரி தாய பரம்பொரு ளுள்ளத் தருளிடத்தே
யொளிப்பது மாகவுள் ளென்றுபின் மாமறை யோதிடுமே. (59)

கண்டபடி யேகண்டு காணுமை காணுமற்
கொண்டபடி யேகொண் டிரு.

மன்னரு ணின்னுயிர் தன்னுண் மருவி மகிழ்ந்துனது‡
வுன்னு சுதந்தர மொன்றறக் காண்ட லுறுமையிலே
பின்னை யொருபொரு டற்போத மாயை பெரிதறவே
யன்னிலை யுன்னிலை மன்னிலை யாமென் றறிந்துணரே. (60)

அறியுநெறி முற்றிற்று.

---

சளம் = துன்பம்.

§களப்படு—இடைக்குறை.

‡ அடித்தடித்து வக்காரமுந்தீட்டிய என்றபடி குற்றிய லுகரத்தின் முன் வகர உடம்படுமெய் வந்தது.

## 7-வது உயிரவை விளக்கம்.

தூங்கிழலார் தற்காருஞ் சொல்லார் தொகுமிதுபோற்
றூனதுவாய் நிற்குந் தரம்.

வெய்ய கதிதனில் வெவ்வழ லாலும் விடாய்த்தவன்றன்
றுய்ய நிழலினிற் றேய்வதற் காருஞ்சொல் லாததுபோல்
வய்ய மடல்பணி வாயினிற் றேரை மயக்கமுற்று
ருய்வ ாருளுட னென்றுந் தரமென்று மோதுவரே. (61)

தித்திக்கும் பாறுனுங் கைக்குந் திருந்திடுநாட்
பித்தத்திற் றன்றவிர்ந்த பின்.

பித்தின் மயங்கிப் பிறிவிலாப் பேரருள் பெற்றறியார்
தித்திக்கும் பாலுந் திரிவாய்க் கசக்குந் திரிந்திடுநாப்
பித்தந் தெளிந்தது போலுந்தற் போதம் பிறிந்துகண்டா
லத்த னுயிர்கட் கறிவிப்ப னென்றநங் கடங்குவரே. (62)

காண்பா னொளியிருளிற் காட்டிடவுந் தான்கண்ட
வீண்பாவ மெந்நாள் § விடும்.

அகமும் புறமு மறிவா னுருக்கொண் டவனிவந்து
சகமும் விரிகதிர் காட்டிடக் கண்டிடுந் தன்மையைப்போ
$ லுகவுண் ணுயிர்க்கு முயிராகி நின்று முணர்த்துதலை
மிகவு மறிவிக்க நானறிந் தேனென்றல் வீணிதுவே. (63)

ஒளியு மிருளு மொருமைத்துப் பன்மை
தெளிவு தெளியார் செயல்.

---

§ விழும் என்றும் பாடம்.

$ உகவுண்—கேடுபடுகின்ற.

அறிவா னதுவு மனாதி யுயிர்க்கழி வித்துநிற்குஞ்
செறிவா மிருளு மனாதி யுயிரைச் செறிந்துநிற்கும்
பிறிவாஞ் சிவதன்மத் தாலேயு ஞானம்ப்ர காசமதாங்
குறியாய்க் குருவி னருளாற்றற் போதங் குறித்துணர்ந்தே. (64)

கிடைக்கத் தகுமேநற் கேண்மையார்க் கல்லா
லெடுத்துச் சுமப்பானை யின்று.

இப்போ துடம்பை யெரியுநஞ் சேயென வெண்ணியொரு
மெய்ப்பரன் ஞானக் குருவினை மேவித்தன் மெய்யுணர்ந்தோன்
றப்பா மலமுன்னர்ச் சுட்டாஞ் சுமையினைத் தான்றவிர
வப்பா சுகமிரு வென்றே யதனை யகல்விப்பனே. (65)

வஞ்ச முடனொருவன் வைத்த நிதிகவரத்
துஞ்சினையோ போயினையோ சொல்.

துஞ்ச விலாமலுந் தோற்ற மிலாமலுந் துய்யவரு
ளஞ்ச லெனவே யறிவுக் கறிவா யனைத்துயிர்க்கும்
பஞ்ச கிருத்தியம் பண்ணவுண் டாய பழம்பொருளை
வஞ்ச முடனீ கரப்பது முன்றன் மதிக்குறையே. (66)

தனக்குநிழ லின்று மொளிகவருந் தம்ப
மெனக்கவர நில்லா திருள்.

வச்ச படிக வரைமீது மேலென வந்துகதிர்
உச்சியங் கால முறுவது போல வுயிரதனி
னிச்சய மாக வருளே பெருகி நிறைந்துவிடின்
அச்சம தில்லையங் காதவன் முன்னிரு ளாய்விடுமே. (67)

உற்கைதரும் பொற்கை யுடையவர்போ லுண்மைப்பி
னிற்க வருளார் நிலை.

விளக்கினைக் கொண்டிருள் வீட்டிற் பதார்த்த மெடுப்பவர்போ
லுளக்கண்ணை யுட்கொண்டு தற்போதம் போக வொளிப்பதுதான்
துளித்திடின் மேகங் கடல்வா யினிலுப்புச் சோர்வதுபோல்
வளத்த கருணை வசமாகி லாங்கரு ளாய்விடுமே. (68)

ஐம்புலனாற் றன்கண் டகன்று லதுவொழிய
வைம்புலனார் தாமா ரதற்கு.

ஐம்புல னுலங் குயிர்போகங் கண்டங் கருந்துவபோற்
றம்பொரு ளைம்புல னுக்கேது மில்லையத் தன்மையைப்போ
னம்புறு முத்தியி னஞ்செய னியரு ளுடிக்கண்டால்
வம்பேது போக வருமோ வுனக்கினி வையகத்தே. (69)

தாமே தருபவரைத் தம்வலியி னுற்கருத
லாமே யிவனு ரதற்கு.

தாமே தமக்குத் தமையே கொடுத்துச் சகசமது
வாமே யளவு மடங்கிநில் லாய்மதி நீயொருகாற்
போமே பொருளுந்தற்போதமு மாவையுன் போதமற்றுற்
கோமா னுகந்து வுளத்தி னிறைந்து குடிகொள்வனே. (70)

உயிரவைவிளக்கம் முற்றிற்று.

---

## 8-வது இன்புறு நிலை.

இன்புறுவார் துன்பா ரிருளி லெழுஞ்சுடரின்
பின்புகுவார் முன்புகுவார் பின்.

தற்போதப் பேரிரு டானீங்கத் தோன்றுந் தனிச்சுடரின்
பிற்போதிற் பேரின்பு மின்புறு வார்கள் பெருத்தவருள்

முற்போதிற் றன்ப முறுவார்க ளென்ற மறைமொழியைச்
சிற்போத னின்மல வாண னெமக்கிது செப்பினனே. (71)

இருவர் மடந்தையருக் கென்பயனின் புண்டா
மொருவ னொருத்தி யுறின்.

மருளினை நீக்கிய மன்னருட் கீட மகிழ்ந்தனனேல்
இருவர் மடந்தையர் சேரிலின் பேதுண்டே யின்புளதா
மொருவ னொருத்தி யுடன்கூடி லுள்ள வுறுபயன்போ
லருளி லழுந்திய நன்முதல் சேரின்ப மாவதுவே. (72)

இன்பதனை யெய்துவார்க் கீயு மவர்க்குருவ
மின்பகன மாதலினு லில்.

ஒருவ னொருத்தி யுறிலின் பிருவர்க்கு மொக்குமெனில்
வருவது போல விவனு லவனின்பம் வாங்கிக்கொள்ளான்
றருவ னிவனுக்குத் தன்னரு ளின்பந் தனக்குருவம்
பெருகிய வின்பது வேறு பெருதிந்தப் பேரின்பமே. (73)

தாடலைபோற் கூடியவை தானிகழா வேற்றின்பக்
கூடலைநீ யேகமெனக் கொள்.

§தாடலை தானது தான்மூன்ற தாகவுந் தான்பிரிந்து
கூடிய சொல்லும் பொருளுங் குறட்குறை வற்றதுபோ
ஞடிய சீவன் நேயத்திற் சென்று நயந்தவின்ப
மாடி யழுந்தி யதுவொன்று மாமென் றறைவர்களே. (74)

---

§தான் கண்டு அறியும் ஞாதுரு ஆகிய ஆன்மா தலைகண்டு அறியப்படும் நேயமாகிய சிவம்திருவருளால் இது இவனைக்கண்டு அறியும் காட்சி யறிவே ஞானம். இந்தத்திரிபுடி ஞானவிகற்பம் மூன்றும் இன்றிச் சிவானுபவம் சுவானுபூதிகம் ஆதலே சாயுச்

ஒன்ருனு மொன்ரு திரண்டானு மோசையெழா
தென்ருலொன் ¶றன்றிரண்டு மில்

ஒன்ருனு மென்றென்று சொல்வர்க ணல்லவ ருற்றழுந்த
லென்ரு லிரண்டெனி லின்பம் பெருதிரண் டொன்றறவே
குன்ருத வின்பங் குறைவற வேமிகக் கூடியது
சென்ருலொன் றன்று திரும்பிரண் டில்லெனச் செப்புவரே. (75)

உற்ருரும் பெற்ருரு மோவா துரையொழியப்
பற்ருரு மற்ருர் பவம்.

உரையற்ற மோன முணர்ந்துபெற் றேகிட்டை யுற்றவர்க
டிரையுற்ற வுற்பவஞ் சேர்ந்திற வார்சிந் தனைமுதலாங்
கருவுற்ற மூவருங் காயமொன் ருென்றிக் கருணைபெற்று
விரைவுற்ற நேயத் தழுந்தியவ் வீட்டையு மேவுவரே. (76)

பேயொன்றுந் தன்மை பிறக்கு மளவுமினி
நீயொன்றுஞ் செய்யாது நில்.

பேயொன்றுந் தன்மை பிறக்கு மளவென்று பேசியது
வாய பொருளி னகப்படு மாறுன் னறிவுமரு
வேய சிவன்செய லெய்து மளவிங்குச் சுட்டிலதாய்
நீயென்று நின்செய ருனற வேயு நிறைந்திடுமே. (77)

---

சியம் ஆம். சகசநிட்டையால் இதனைப்பெற்ற ஜீவன்முத்தர்கள் பரமுத்தியின்பத்தைப் பெற்றுத்தேகாந்தத்தில் விதேகமுத்திப் பெரும் போகத்தை அடைவார்கள். இவ்வாறின்றிக் கேட்டல் சிந்தித்தல் ஆகியஇவற்றைப் பெற்றவர்கள் இனி ஒரு காயம் எடுத்தாயினும் அந்நிலையில் நின்று மேலேறியேனும் பரமுத்தி அடைவர்கள் என வரும் செய்யுளில் (76) கூறுகின்ருர்.

¶ஓரிரண்டு மில் என்றும் பாடம்.

ஒண்பொருட்க ளுற்றார்க் குறுபயனே யல்லாது
கண்படுப்போர் கைப்பொருள்போற் காண்.

உறக்கத்தி லுற்றவர் போலின்ப வாரியி னுள்ளழுந்தி
மறக்குந் தனையுமற் றுங்கவன் கைக்கொண் டறைவனபோற்
சிறக்கு மிவற்குச் சிவன்செய லானுந் தெரிவதில்லை
யிறப்பில்லைப் பேரின்ப மாகிய மாகட லெய்தினரே. (7

மூன்றாய தன்மையவர் தம்மின் மிகமுயங்கித்
தோன்றாத வின்பமதென் சொல்.

மூன்றாய தன்மை யெனமொழி கின்றவர் மூலமலந்
தான்றான் முயங்குத லான நீங்குமத் தன்மையைப்போ
லேன்றார்க ணன்முத்தி யெய்திய தானற வேதுமறச்
சேன்றா னுயர்ந்த சிவானு பவத்தினிற் சேர்ந்தவரே. (

இன்பி லினிதென்ற லின்புண்டே லின்புண்டா
மன்பி னிலையே யது.

இன்பப் பெருக்கி னிறலே யவையென்ற யின்மொழியைத்
துன்பத் துவக்கறச் சோதி யெழுந்து சுகாநந்தமா
யன்புப் பெருக்கினிற் பேரின்ப தாகிமெய் யன்பெழுந்தால்
மின்பெற்ற வாழ்விற் பெருவாழ்வ தாகவு மேவுவரே.

இன்புறுநிலை முற்றிற்று.

---

## 9-வது ஐந்தெழுத்தருணிலை.

அருணூலு மாரணமு மல்லாது மைந்தின்
பொருணூ றெரியப் ‡புகின்.

---

‡ புகும் என்றும் பாடம்.

தெருளுடை யோர்களுக் காக வுரைத்த சிவாகமமும்
மருளினை நீக்கப் பொதுவா கியமறை வாக்கியமு
மருளுடை யோர்கள்மற் றெல்லாமு மாய்ந்திது வஞ்செழுத்தின்
பொருளெனத் தேர்ந்து மொழிவா ருணர்வுள புண்ணியரே. (81)

இறைசத்தி பாச மெழின்மாயை யாவி
யுறநிற்கு மோங்காரத் துள்.

இறையொடு கூடி யினிதா மருளு மிசைந்தவுயிர்
சிறைசெயு மாணவஞ் சேர்மாயை தன்னொடு சிக்கெனவே
வுறையுமிவ் வைந்து மோங்காரத் துள்ளென்று மோதுவர்கள்
முறையினி னிற்கு முதன்மையைக் கண்டு முணர்ந்துகொள்ளே.-(82)

ஊன நடன மொருபா லொருபாலா
ஞான நடந் தானடுவே நாடு.

மவ்வொடு கூடி மருவா நகர மொருவுதலால்
நவ்வொடு கூடிய வூன நடனமோர் பக்கமதாம்
வவ்வொடு கூடி வருசிமெய்ஞ் ஞானம் வளர்பக்கமாஞ்
செவ்விய வாவி நடுவாகி நிற்குந் திறமிதுவே. (83)

விரியமன மேவியவ்வை மீளவிடா சித்தம்
பெரியவினை † தீரிற் பெறும்.

விரிய மனமுன மோங்கிட மேவி விளங்குதலா
லரிய வுயிரு மதனோ டிசைந்து மருடெரியா
பெரிய மலவினை சித்தத்தை விட்டுப் பிரியவரு
ளரிய தெனவு மதனுடன் கூடி யொழிந்திடுமே. (84)

---

† தீரப்பெறும் என்றும் பாடம்.

மாலார் திரோத மலமுதலாய் மாறுமோ
மேலாசி மீளா விடின்.

ஏலா மலவிரு ளென்னுள கன்ம மிசையவிங்கே
மாலார் திரோத முதலாய் மறைத்தது மாறிடுமோ
கோலால மான குருநாத னேயின்பங் கூறியதோ
பாலார் சிவமுத லோதின்பம் வந்து பதிந்திடுமே. (85)

ஆராதி யாதார மந்தோ வதுமீண்டு
பாராது மேலோதும் பற்று.

ஆரா தனைசெய் தடித்தா மரைக்கன்பு செய்துமிகப்
பேராமை நித்தம் பெருந்தாணு வென்று பிரியமெய்தின்
பாரோர் பரம்பொரு ளுள்ளத் துணர்வாய்ப் பரந்தவின்ப
மாரா வமுதென நின்றே யருந்தி வளித்திடுமே. (86)

சிவமுதலே யாமாறு தேருமேற் றீரும்
பவமிதுநீ யோதும் படி.

சிவமுத லாகிய வைந்தையு முள்ள படிதெளிந்து
தவமது வாகவு முச்சரித் தாலரு டானதுவாய்ப்
பவமது நீங்கிச் செனன மரணப்பன் ஞெயகலு
நவமது வோதவு நாடிய முத்தர் நயப்பர்களே. (87)

வாசி *யருளியவை வாழ்விக்கு மற்றதுவே
யாசி லுருவமுமா மங்கு.

வவ்வா கியவரு டானே மகிழ்ந்து மகாசிவத்தின்
யவ்வா முயிரையு மெய்துவித் தேயங் கியல்புடனே

---

*யருளியதை என்றும் பாடம்.

தெய்வீக மாக வருட்டிரு மேனித் திறம்பெருகி
யிவ்வாறு பேரின்பத் தேனி லழுந்தி யிருந்திடுமே. (88)

ஆசினவா காப்ப ணடையா தருளினால்
வாசியிடை நிற்கை வழக்கு.

ஆசா மகார நகார வகாரத்தத் தத்தடையத்
தூசா நிலையல்ல துன்பமென் றெண்ணித் துணிந்தெமக்கு
வாசா வருளின் வழிபாச் சிகார மதனடுவே
கூசா திருவென்று வம்பல வாணனுங் கூறினனே. (89)

எல்லா வகையு மியம்பு மிவனகன் று
நில்லா வகையை நினைந்து.

வேதா கமங்களு மிக்க புராண மிருகலையு
மோதாம லோதிப தெல்லாப் பொருளு முயிர்க்கிரங்கிப்
பேதா வபேதமு மின்றியல் வத்து விதம்பெறவே
நாதாதி நாத னருளிய தாகு நயந்தறியே. (90)

ஐந்தெழுத்தருணிலை முற்றிற்று.

---

## 10-வது அணைந்தோர் தன்மை.

ஓங்குணர்வி னுள்ளடங்கி யுள்ளத்தி னின்பொடுங்கத்
தூங்குவர்மற் றேதுண்டு சொல்.

எங்கெங்கு மாகியு மெவ்வுயி ராகு முயிர்வினையின்
றங்குத லற்ற சருவஞ் ஞனனுடன் முனடங்கி

யங்கு மடங்கின மென்ற நினைவும தற்றபின்ன
ரிங்கொரு பேய்பிடித் தேறிய போலு மிருப்பர்களே. (91)

ஐந்தொழிலும் காரணர்க ளாந்தொழிலும் போகநுகர்
வெந்தொழிலு மேவார் மிக.

பஞ்ச கிருத்தியம் பண்ணுங் கடவுளர் பான்மையிலு
மிஞ்சிய திக்கின் மிகுத்திடு போக விருப்பங்களுஞ்
செஞ்சொன் மிகுத்த சிவலோக போகஞ் சிறிதுமெண்ணா
நெஞ்சி லெழுந்து பெருகிய வின்ப நிறைந்தவரே. (92)

எல்லா மறியு மறிவுறினு மீங்கிவரொன்
றல்லா தறியா ரற.

எல்லாங் கரணத் தறிகின்ற நேயத்தி னின்புமிக
நில்லாமை நிற்கு நிலைமை யுடையவ னீங்கியது
வல்லாது மொன்று மறிவ தருதிவ் வவனியிலே
நல்லார்கள் சர்க்கரை பாடேனி னின்பென்று நாடுவரே. (93)

புலனடக்கித் தம்முதற்கட் புக்குறுவர் போதார்
தலனடக்கு மாமை தக.

இந்திரி யங்க ளிடையே விடயங்க ளெய்திடிலே
முந்தை முதல்வனை முன்னிலை யாகவு மொன்றுமிலா
னிந்த வுலகி லியங்கிடு மாமை யெதிர்வரவு
மந்த வியல்பி லடங்கிக் கிடக்கு மதுதகவே. (94)

அவனையகன் றெங்கின்றா மாங்கவனு மெங்கு
மிவனையொழிந் துண்டாத லில்.

ஈசனை யன்றியு மெவ்விடத் தானெங்கு மாயவனே
வோசை யுலகெங்கு மப்பாலு $மானையுயர்த்தசொல்லும்

---

$மானையுயர்த்தசொல் = ஆகாயவாணி.

*வாசவ னன்றி வாழ்வதெங் கேயுயிர் மன்னியவன்
நேசம தாகிய வின்பம தேகிலை யென்றறியே. (95)

உள்ளும் புறம்பு மொருதன்மைக் காட்சியருக்
கெள்ளுந் திறமேது மில்.

உயிர்க்குயி ராகத்தன் னுள்ளே விளங்க வுணர்த்துவது
மியக்கம தாகப் பல்லுயிர்க் கெல்லா மியற்றுவது
மயிக்கம தாகச் சிவன்செய லென்றே யறிந்துணர்ந்தோர்
வெயிற்கு ளணுவு மவன்செய லாக விளங்குவரே. (96)

உறுந்தொழிற்குத் தக்க பயனுலகந் தத்தம்
வறுந்தொழிற்கு வாய்மை பயன்.

உலகத் துளோர்க ளுறுந்தொழிற் கானவை யுற்றபொருள்
பலமுற்றுத் தத்தம் பருகுவர் போலிந்தப் பாரிலின்பம்
விலகிப் பரந்தருள் வீட்டை விரும்பிய வித்தகர்க்கு
நலமுற்ற நேய நயப்பதல் லாலொன்றை நாடிலரே. (97)

என்ற வினையுடலோ டேகுமிடை யேறுவினை
தோன்றி லருளே சுடும்.

எடுக்க வுடலுக்கு மேன்ற வினையது மேறிடுமோ
தொடுக்கு மனுதியிற் றோன்றிய போலங்குத் தோன்றுவினை
யடுக்குந் திருவரு ளாலே யமையுமங் கன்பர்க்கின்பங்
கொடுக்கும் பெருங்கடல் மேவித் தளையறக் கொள்வர்களே. (98)

மும்மை தரும்வினைகண் மூளாவா மூதறிவார்க்
கம்மையு மிம்மையே யாம்.

---

*வாசவன் = இந்திரன், சிவன்.

சஞ்சிதத் தோடு பிராரத்தந் தானுந் தயங்கியிங்கு
மெஞ்சு மெதிர்வினை யெல்லா மிழந்து மினிமைபெற்றோர்க்
கஞ்சல தாகிய வம்மையு மிம்மையி லாகுமிங்குத்
தஞ்சம தாகிய பேரின்பம் பெற்ற தகைமையற்கே. (99)

கள்ளத் தலைவர் துயர்கருதித் தங்கருணை
வெள்ளத் தலைவர் மிக.

கள்ளம தாகிய காரண மூலத்தின் காரிருளி
னுள்ள மறைந்து மரணத் துறுதுய ரோர்க்கிரங்கித்
தெள்ளிய வின்பக் கருணைப் பெருக்கின் செழுங்கடலின்
வெள்ளத்திற் றானு மிகவே யலைந்தின்ப மேவுவரே. (100)

அணைந்தோர்தன்மை முற்றிற்று.

எந்தன் மலமறுக்கு மெம்பிரான் செம்பொனடி
வந்தவரு ணந்தி மகன்.

திருவருட்பயன் உதாரணக்கலித்துறை முற்றிற்று.

குரு ஞானசம்பந்தர் திருவடி துணை.

திருச்சிற்றம்பலம்.

---

SRI AMBAL PRESS — SHIYALI.

# திருக்கைலாய பரம்பரை தருமபுரம் ஆதீனம் மடாலயத்தில் இலவசமாகக் கிடைக்கும் புத்தகங்கள்.

| நெ. | புத்தகங்களின் பெயர். | உள்நாடுகளுக்கு தேவையான போஸ்டல்ஸ்டாம்பு விபரம். ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | முத்திநிச்சயம் | 0 | 1 | 9 |
| 2. | சிவபோகசாரம் & சொக்கநாதவெண்பா ஆங்கிலமொழிபெயர்ப்புடன் | 0 | 1 | 9 |
| 3. | சோடசகலாப் பிரசாத சட்கம் | 0 | 0 | 9 |
| 4. | சிவாநந்தபோதசாரம் | 0 | 0 | 9 |
| 5. | குரு ஞானசம்பந்தசுவாமிகள் சமூக மாலைத்தாலாட்டு | 0 | 0 | 9 |
| 6. | நித்தியகன்ம நெறி | 0 | 1 | 3 |
| 7. | சிவப்பிரகாசக்கட்டளை | 0 | 1 | 3 |
| 8. | ஞானசரிதை | 0 | 1 | 3 |
| 9. | திருத்துருத்தி புராணம் | 0 | 4 | 3 |
| 10 | திருவையாற்று புராணம் | 0 | 1 | 9 |
| 11. | 23-வது மகாசந்நிதானத்தின்பேரில் பல வித்வான்கள் செய்த தோத்திரப் பாடற்றிரட்டு | 0 | 2 | 9 |
| 12. | அறிவானந்த சமுத்திரம் | 0 | 1 | 9 |
| 13. | இந்துமத பால பாடம் | 0 | 1 | 0 |
| 14. | பண்டார மும்மணிக்கோவை (குறிப் புரையுடன்) | 0 | 0 | 9 |
| 15. | சிதம்பரம் செய்யுட்கோவை (பதவுரை குறிப்புரையுடன்) | 0 | 1 | 6 |